தமிழ்த் தேசியத்

# தமிழர் கண்ணோட்டம்

10 - 1 திருவள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி சனவரி 1-15 2017 ரூ. 15/-



## தமிழர் மரபுப்படி ஊர்தோறும் காளைத் திருவிழா

தமிழ்த்தேசியப் பேரியக்கம் முடிவு!

# தமிழர் மரபுப்படி ஊர்தோறும் "காளைத் திருவிழா"

## தமிழ்த்தேசியப் பேரியக்கம் முடிவு!

தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைமைச் செயற் குழுக் கூட்டம், தஞ்சை த.தே.பே. அலுவலகத்தில் 18.12.2016 காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

கூட்டத்திற்கு, பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் முன்னிலை வகித்தார். பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பி னர்கள் தோழர் குழ. பால்ராசு, பழ. இராசேந்திரன், நா. வைகறை, கோ. மாரிமுத்து, இரெ. இராசு, க. விடுதலைச்சுடர், க. முருகன், க. அருணபாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, தமிழ்த்தேசியப் பேரியக்கத் தஞ்சை மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் க. பழனி மாணிக்கம், பாவலர் இன்குலாப், கியூபப் புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோ, தமிழின உரிமைப் போராளி புலவர் மகிபை பாவிசைக்கோ ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, ஒரு நிமிடம் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனமாக நிறைவேற்றப்பட்டன.

**1. தமிழர் மரபுப்படி ஊர்தோறும் "காளைத் திருவிழா" நடத்திட தமிழ்த்தேசியப் பேரியக்கம் வேண்டுகோள்!**

பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழர்கள் தங்களின் பொழுதுபோக்கு விளையாட்டின் ஒரு பகுதியாக கடைபிடித்து வந்த சல்லிக்கட்டு விளையாட்டை தடை செய்வதற்கு சில அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததின் விளைவாக, சல்லிக்கட்டு விளையாட்டிற்கு தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளையில், தமிழர்களின் மரபுவழிப்பட்ட வழிபாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஏறுதழுவுதல் இருக்கிறது என்ற தமிழ்நாடு அரசின் வாதத்தை ஆய்வு செய்த உச்ச நீதிமன்றம், காளைகளை அலங்கரித்து அதை ஒரு ஆன்மிக நிகழ்வாக நடத்திக் கொள்ள தடை இல்லை என்று தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

இந்த நிலையில், தமிழர் மரபு அடிப்படையில் சாதிச் சமய வேறுபாடற்ற திருவிழாவாக "காளைத் திருவிழா" நடத்துவ தென்று தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு முடிவு செய்கிறது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலுள்ள நுட்பத்தை தமிழ் நாடு அரசு புரிந்து கொண்டு, "காளைத் திருவிழா" நடத்த உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தமிழ்த்தேசியப் பேரியக்கம் கேட்டுக் கொள்கிறது.

இதன் தொடர்ச்சி 35 ஆம் பக்கம் பார்க்க...



# தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்

ஆசிரியர் – வெளியீட்டாளர்

**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர்

**கி.வெங்கட்ராமன்**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கவிபாஸ்கர், க.அருணபாரதி,**

**நா.வைகறை, அ. ஆனந்தன்,**

**பொன்னுசாமி, க.காந்திமதி**

வடிவமைப்பு

**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு

**தமிழ்த் தேசிய வரைகலை,**

**சென்னை - 17.**

அச்சாக்கம்

**பிரின்ட் பாஸ்ட்,**

**வேளச்சேரி, சென்னை - 42.**

**தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்**

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.
தொலைப்பேசி : 044-24742911

மின்னஞ்சல்: tkannotam@gmail.com
tamizhdesiyam@gmail.com
இணையம்
http://tamizharkannotam.blogspot.com
http://www.kannotam.com

❖

**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**
இணையம்
http://tamizhdesiyam.com

❖

கீற்று இணையதளத்திலும் படிக்கலாம்
www.keetru.com

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூ | 15 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ | 350 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ | 1000 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ | 1600 |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ | 3000 |





## உள்ளே...


இனக்காப்பு அரசியலா?
கங்காணி– ஊழல் அரசியலா? எது தேவை?
*–பெ. மணியரசன்*.................................................................... 6

இந்தியாவில் ஏதிலியருக்கு இனப்பாகுபாடு
*–க. அருணபாரதி* ......................................................................15

செல்லாப் பணத்தாள் சூழ்ச்சித் திட்டம்
தமிழ்த் தேசியர்களின் கடமை என்ன?
*– கி. வெங்கட்ராமன்*................................................................ 19

காவிரியைக் காவு கேட்கும் மோடி அரசின்
ஒற்றைத் தீர்ப்பாயம்
*–பெ.மணியரசன்*..................................................................... 26

சிறுவர் பாடல் : தமிழன்னை வணக்கம்
*பாவலர் முழுநிலவன்*.............................................................. 29

காவிரி உரிமை மீட்க இனி என்ன செய்யவேண்டும்?
*– தஞ்சை காவிரி உரிமைப் பாதுகாப்பு*
மாநாட்டில் பெ. ம. உரை .........................................................30



**அறிவிப்பு**

உறுப்புக்கட்டணங்கள் (சந்தா), த.க. விற்பனைத் தொகை ஆகியவற்றைக் கீழ்க்காணும் வங்கி முகவரியில் செலுத்தலாம்
**தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை,**
**இந்தியன் வங்கி,** தி.நகர், தெற்கு உஸ்மான் சாலை–கிளை
**சேமிப்புக் கணக்கு எண்: 6126971024**
IFSC CODE: IDIB000T115

# செயலலிதாவுக்கு பாரத ரத்னா இராமமோகனராவுக்கு பத்மவிபூசன்

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக இருந்த நிலையில் கடந்த 26.12.2016 அன்று காலை இராமமோகனராவ் இல்லம் மற்றும் தலைமைச் செயலகத்தில் அவரது அலுவலக அறை ஆகியவற்றை நடுவண் அரசின் வருமானவரித்துறை, நடுவண் துணைப் படையின் துப்பாக்கி ஏந்திய காவலர்களுடன் சோதனையிட்டு பணம், நகை, சில ஆவணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிச் சென்றது. இந்த அதிரடி நடவடிக்கை, தமிழ்நாட்டு உரிமையில் அக்கறையுள்ளோரிடம் குழப்பமான உணர்வுகளை உண்டாக்கியது.

நண்பர்கள் சிலர் நம்மிடம் அப்போதே பேசினார்கள். இராமமோகனராவ் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி நமக்குக் கவலை இல்லை; தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்திற்குள் நடுவண் துணைப் படையினர் துணையுடன் நடுவண் அரசு அதிகாரதிகள் அனுமதியின்றி நுழைவது தமிழ்நாட்டு அரசுரிமையில் ஆக்கிரமிப்பு செய்ததாகாதா என்றனர். இதை எப்படி ஏற்க முடியும் என்று கொதித்தவர்களும் உண்டு.

அப்போதே அந்த நல்ல நண்பர்களுக்கு நாம் அளித்த விடை இதுதான்:

"அரசு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி கொள்ளையடித்த இராமமோகனராவ் போன்ற கயவர்களைப் பிடிக்க நீதிதேவதை வராத நிலையில், பிசாசு வந்தாவது பிடிக்கட்டுமே! நமக்கு வேறு என்னதான் வழி இருக்கிறது? இந்திய அரசும் தன்னலத்தோடுதான் காய் நகர்த்துகிறது. இதிலாவது இந்தக் கொள்கையர்கள் மாட்டட்டும்!".

ஏடுகளில் விமர்சனம் எழுதுவோர், "இராமமோகனராவ் மட்டும்தான் குற்றவாளியா? அவருக்குப் பின்னால் இருந்தவர்கள் யார்?" என்று வினாக் கேட்டு அத்துடன் நிறுத்திக் கொள்கிறார்கள். அதற்கான விடையை அதே இராமமோகனராவ் 27.12.2016 அன்று தமது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறியுள்ளார்.

"மறைந்த முதலமைச்சர் அம்மா (செயலலிதா) உயிரோடு இருந்திருந்தால், தலைமைச் செயலாளர் அறைக்குள் நுழைந்து சோதனை நடத்த அவர்களுக்குத் துணிச்சல் வருமா? 1994-ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக நான் பணியாற்றிய போது, முதல்வர் அம்மாவிடம் நிர்வாகப் பயிற்சி பெற்றேன். ஏழு மாதங்களுக்கு முன் அம்மாதான் என்னைத் தலைமைச் செயலாளராய் பணியமர்த்தினார். அவருடைய ஆணைப்படிதான் செயல்பட்டு வந்தேன். செயலலிதாவின் வழிகாட்டுதல்படிதான் நடந்து வந்தேன். எந்தக் கேள்விக்கும் அஞ்சி நான் ஓட மாட்டேன்".

"எழுபத்தைந்து நாட்களாக நான்தான் அம்மாவைப் பாதுகாத்தேன். அம்மா இல்லாததால் இப்போது மாநிலத்தில் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. நான் மக்களுக்கு என் பணியைத் தொடர்வேன்."

ஆங்கில இந்து நாளேடு, "இராமமோகனராவ், தமது நேர்காணலில் அடிக்கடி செயலலிதா பெயரைப் பயன்படுத்தினார்" என்று குறிப்பிடுகிறது (28.12.2016).

பணி மூப்பு வரிசையில் இராமமோகனராவைவிட பதினாறு பேர் முன்னணியில் இருந்தார்கள். அத்தனை பேரையும் பின்னுக்குத் தள்ளி, மோகனராவைத் தலைமைச் செயலாளர் ஆக்கினார் செயலலிதா.

1994-லில் இருந்தே செயலலிதாவின் தனிப்பட்ட விசுவாசியாகிவிட்ட இராமமோகனராவ், என்ன ஊழல் செய்திருந்தாலும் அது செயலலிதாவுக்காக, செயலலிதாவின் ஒப்புதலோடு செய்யப்பட்ட ஊழலே! அதில் இராமமோகனராவுக்கு ஒரு பகுதி போய் விடும்!

தமிழ்நாட்டு மணலையெல்லாம் காலி செய்து, மலை மலையாய்ப் பணம் குவிக்கும் கொள்ளையன் சேகர் ரெட்டி சிறையிலிருக்கிறான். "சேகர் ரெட்டியோடு உங்களுக்குத் தொடர்பிருக்கிறதாகச் சொல்கிறார்களே?" என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, "அவர் யாரென்றே எனக்குத் தெரியாது" என்றார் மோகனராவ். உடனே ஒரு செய்தியாளர், "செயலலிதா இறந்துவிட்ட செய்தி உங்கள் கைப்பேசியிலிருந்துதான் சேகர் ரெட்டிக்குப் போயிருக்கிறது என்கிறார்களே?" என்று கேட்டார். அதற்கு, "ஒரு நாளைக்கு என் கைப்பேசியில் 100 பேர் தொடர்பு கொள்கிறார்கள், எல்லோரையும் என்னால் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது" என்றார்.

செயலலிதாவுக்கு இராமமோகனராவ் மீது தனிப்பற்றும் நம்பிக்கையும் வந்ததற்கு முகாமையான காரணம், போயஸ் தோட்ட வருமானத்தை உயர்த்தும் வழி சொன்னவர்; புது வருமானத்திற்கு வழியும் சொன்னவர் என்பதுதானாம்!

அரசுத் திட்டங்களை நிறைவேற்ற ஒப்பந்தத்திற்கு விடும்போது, முதல்வருக்கான "வெட்டுத்தொகை" 6 விழுக்காடாக இருந்ததை, 10 விழுக்காடாக உயர்த்தியவர் மோகனராவ் தானாம். மணல் வணிகத்தை அரசே ஏற்று நடத்தினால், 365 நாளும் போயஸ் தோட்டத்தில் பணமழை பொழியும் என்று சொன்னவரும் மோகனராவ் தானாம்! இதெல்லாம் கசிந்த செய்திகள்.

இப்படிப்பட்ட செயலலிதா தெய்வமாகப் போற்றப்படுகிறார் தமிழ்நாட்டில்! எங்கோ ஒரு கிராம நிர்வாக அலுவலர் ஐந்தாயிரம் ரூபாய் கையூட்டு வாங்கிவிட்டார் என்று கைவிலங்கு மாட்டி சிறைக்கு அழைத்துப் போகிறார்கள். எங்கோ ஒரு கீழ்நிலை அதிகாரி ஐம்பதாயிரம் ரூபாய் கையூட்டு வாங்கியபோது, கையும் களவுமாகப் பிடிபட்டார் என்று செய்தி வருகிறது. சல்லிக்காசு கையூட்டு வாங்காமல், சட்டப்படி பணியாற்றி, ஓய்வு பெறும்போது ஒரு சேமிப்புமில்லாமல் வீடு திரும்பும் அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் அடுத்த வீட்டுக்காரருக்குக்கூடத் தெரியாது.

இந்த உலகத்தில் ஏனிந்த முரண்பாடு? தமிழினப் பேராசான் திருவள்ளுவப் பெருந்தகையே தடுமாறிப் போன இடம் இது!

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*

*கேடும் நினைக்கப் படும்*

என்று கூறி முடிவு சொல்லாமல் விட்டுவிட்டார்.

நாம் யாருடைய சாவையும் கொண்டாடக்கூடாது. அதே வேளை யாருடைய பாவங்களையும் அவர்களின் சாவு கழுவிவிடாது!

தமிழ்நாட்டு அரசியலில் இனி வெட்டுத் தொகையும் கையூட்டும் இல்லாமல் தடுத்திட, விழிப்புணர்வு உண்டாக்குவோம்!

"அம்மா" வழங்கிய இலவச மிதிவண்டியை ஓட்டிச் செல்லும் மாணவ மணிகள் குற்றமற்றவர்கள். ஆனால் இதை இலவசமாக வழங்கியவர்தான் காவிரி, கொள்ளிடம், தாமிரபரணி ஆறுகளின் எஞ்சிய உயிரையும் கொல்லுலும் வகையில் மணல் கொள்ளையிட வாய்ப்புத் தந்து, அரண்மனை வாழ்க்கை வாழ்ந்தவர் என்பதை அவ்வப்போது நினைத்துக் கொள்ளுங்கள்.

"அம்மா" வழங்கிய இலவச மிக்சி, கிரைண்டரைப் பயன்படுத்தும் மகளிர் குற்றவாளிகள் இல்லை. இவற்றை இலவசமாக வழங்கியவர்தான் டாஸ்மாக் கடைகளைத் திறந்து, ஏழை எளியக் குடும்பங்களை நிரந்தர வறுமையில் தள்ளியவர். குடும்பத்தின் அமைதியை – அன்பைக் குலைத்தவர் என்பதையும் அவ்வப்போது நினையுங்கள்.

அ.இ.அ.தி.மு.க. அரசு செயலலிதாவுக்குப் புதுதில்லியில் பாரத ரத்னா பட்டம் கேட்கிறது. அப்படியே இராம மோகனராவுக்கு பத்மவிபூசன பட்டமும் வாங்கி வாருங்கள்.

அன்புத் தமிழ் மக்களே,

வாக்கு பெற பணம் கொடுப்பது குற்றம்; வாக்களிக்கப் பணம் பெறுவது அதைவிடக் குற்றம்!

தன்மான உணர்வைத் தமிழர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். வாக்கு அளிக்கப் பணம் பெறுவது தன்மானக் குறைவு என்று மனம் துடிக்க வேண்டும்.

இதை எல்லா மக்களும் ஏற்பார்களா என்று எண்ணி சோர்வடையக் கூடாது. எவ்வளவு பேர் ஏற்றுக் கொண்டார்களோ, அவ்வளவு முன்னேற்றம் என்று கருதி கடமையாற்ற வேண்டும்.

ஊழல் நாயகர் – ஒற்றை மையச் சர்வாதிகாரியின் தளபதி இராமமோகனராவ், அந்தச் செய்தியாளர் சந்திப்பில், "தமிழ்நாடே பாதுகாப்பில்லாமல் போய்விட்டது" என்று அங்கலாய்க்கிறார்.

"அம்மா இல்லாததால் இப்போது மாநிலத்தில் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. நான் மக்களுக்காக என் பணியைத் தொடர்வேன்... நீதிமன்றத்தை நாடிச் செல்ல வேண்டிய தேவையில்லை. என்னைப் பற்றி தமிழக மக்களுக்கு நன்கு தெரியும். மக்கள் மன்றத்தை நாடிச் செல்வேன்".

தமிழர் ஒருவர் வேறு மாநிலத்தில், தலைமைச் செயலாளராகப் பணியாற்றி, ஊழல் செய்திருந்தால், "மக்கள் மன்றத்தை நாடுவேன்" என்று சொல்ல முடியுமா? அங்குள்ள அரசியல் கட்சிகள் கடுமையாக எதிர்வினையாற்ற மாட்டார்களா?

ஆந்திராவைச் சேர்ந்த இராமமோகனராவுக்கு தமிழ்நாட்டு அரசியல் தலைவர் போல் பேசும் துணிச்சல் தந்தது யார்? அ.இ.அ.தி.மு.க. அரசு விடை சொல்ல வேண்டும்!

தமிழ்நாட்டைக் கைப்பற்றி ஆண்ட விசயநகரத்து நாயக்கத் தளபதிகளின் வாரிசு என்று தன்னைக் கருதிக் கொண்டாரா இராவ்? பார்ப்பனியமும் சமற்கிருதமும் கோலோச்ச, தமிழர்களிடையே தீண்டாமையையும் சாதிப் பிளவையும் கூர்தீட்டி, அண்டிப் பிழைக்கும் கூட்டமாய் மாற்றி, தமிழர்களைத் திராவிடர்களாக்கிய நாயக்க மன்னர்களின் ஆட்சியை மீண்டும் கொண்டுவர, இராமமோகனராவும் அவர் பின்னால் உள்ள கும்பலும் திட்டமிடுகின்றனரோ?

அது நடக்காது; தமிழ்த்தேசிய வாளேந்தி நிற்கிறார்கள் தமிழ்நாட்டு இளைஞர்கள்! ■

பெ. மணியரசன்

# இனக்காப்பு அரசியலா? கங்காணி - ஊழல் அரசியலா? எது தேவை?



சலித்துக் கொண்டார் நண்பர். "தமிழர்கள் திருந்த மாட்டார்கள்; தமிழ்நாட்டில் மாற்றமெல்லாம் வராது" என்றார். ஏன் என்று கேட்டேன். "அமைச்சர்கள் சசிகலாவின் காலில் விழுந்து வணங்குகிறார்கள். பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், பல்வேறு துணைக் கட்சிகளின் தலைவர்கள், அதிகாரத்தில் உள்ள அ.தி.மு.க. புள்ளிகள், திரைத்துறையினர், அமைப்புகள் நடத்துவோர் எனப் பலரும் போயஸ் தோட்டம் சென்று, முதலமைச்சர் பதவி ஏற்குமாறு சசிகலாவைத் தொழுது கெஞ்சுகின்றனர்" என்றார்.

நான் சொன்னேன்: "தமிழ்நாடு பெரியது; தமிழர்கள் ஏழரைக் கோடிப் பேர்! அவர்கள் சட்டமன்றம், போயஸ் தோட்டம், கோபாலபுரம் ஆகியவற்றோடு மட்டும் சுருங்கிவிடவில்லை. உழவர் இயக்கங்கள், மீனவர் இயக்கங்கள், சூழல் இயக்கங்கள், இயற்கை வேளாண் இயக்கங்கள், பெண்ணுரிமை இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், மாற்றுத் திறனாளி இயக்கங்கள், திருநங்கையர் இயக்கங்கள், மணற் கொள்ளைத் தடுப்பு இயக்கங்கள், தமிழர் உரிமை இயக்கங்கள் எனத் தேர்தலில் போட்டியிடாத எத்தனையோ இயக்கங்களில் மக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வருமான நோக்கமின்றி, தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை அளித்து, ஆக்கப் பணிகள் செய்யும் தன்னார்வ மக்கள் இயக்கங்கள் பல இருக்கின்றன.

இவையெல்லாம் தமிழ்ச் சமூகத்தில் குண மாற்றத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. வரலாற்றின் போக்கையும் மாற்றிக் கொண்டிருக்கின்றன. கோவை - தருமபுரி மாவட்டங்களில் வேளாண் நிலங்களில் கெய்ல் குழாய்ப் பதிக்கும் திட்டம் தடுக்கப்பட்டுவிட்டது. காவிரிப் படுகையில் மீத்தேன் எடுக்கும் திட்டம் தடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் பேரறிவாளன், முருகன், சாந்தன் தலைக்கு மேல் தொங்கிய தூக்குக் கயிறு இந்த இயக்கங்களின் அழுத்தத்தால்தான் அறுக்கப்பட்டது. ஏழு தமிழர் விடுதலைக்குத் தமிழ்நாடு அரசு ஆணையிட்ட நிகழ்வும் இவ்வியக்கங்களின் தாக்கமே!

காவிரி உரிமைப் போராட்டம் 2016இல் அனைத்துக் கட்சிப் போராட்டமாக – அனைத்து வணிகர் அமைப்புகளின் போராட்டமாக – தமிழ்நாடு தழுவிய அளவில் நடத்துவதற்கு முன்னோடியாக முன்னமுத்தம் கொடுத்தவை – காவிரி உரிமை மீட்புக்குழு போன்ற மக்கள் இயக்கங்களே!" என்றேன்.

கடந்த 2016 மே மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில், சற்றொப்ப 5.58 இலட்சம் பேர், எந்தக் கட்சி வேட்பாளருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை என "நோட்டா" வாக்கு பதிவு செய்தனர். இந்தத் துணிவு, அரசியல் சீரழிவின் மீதான வெறுப்பின் வெளிப்பாடே!

என்னிடம் பேசிய நண்பருக்கு மட்டுமல்ல, சமூக நோக்கத்துடன் மாற்றம் விரும்பும் வேறு சிலர்க்கும் இவ்வாறான சலிப்பு இருக்கிறது. இந்தச் சலிப்பு தேவை இல்லை.

நான் மேலே குறிப்பிட்ட இயக்கங்கள் மட்டுமல்ல, தனி நபர்களாக – தமிழர் அவலங்களை – உரிமைப் பறிப்புகளைக் கண்டு கண்டு நெஞ்சங் குமுறும் இளைஞர்கள் இலட்சோப இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இந்தியப் புலனாய்வுத் துறை எடுத்த புள்ளி விவரமொன்று, இந்தியாவிலேயே மக்கள் போராட்டங்கள் அதிகமாக நடந்த மாநிலம் தமிழ்நாடுதான் என்றது.

**"தமிழ்த்தேசியம் இரு தளங்களில் செயல்பட வேண்டும். ஒன்று அடித்தள அரசியல்; இது தேர்தலில் போட்டியிடாத வெகு மக்கள் இயக்கம். இன்னொன்று மேல்தள அரசியல்; இது மேற்கண்ட இலட்சியங்கள் நடைமுறைகளுடன் தேர்தல் அரசியலையும் இணைத்துக் கொண்டது."**

**எவ்வகைப் போராட்டங்கள் நடக்கின்றன?**

என்ன குறை என்றால், இந்த இயக்கங்களிடையே பொதுப்புரிதலும், பொது ஒருங்கிணைப்பும் இல்லை என்பதுதான்!

பொது ஒருங்கிணைப்பு என்று நான் கூறுவது, இவை அனைத்தும் ஒரே கூட்டமைப்பின் கீழ் செயல்பட வேண்டும் என்ற பொருளில் அல்ல!

இவ்வாறு தனித்தனியே இயங்கு வோரிடையே, சிந்திப்போரிடையே பொதுப் புரிதலுடன் கூடிய பொது இலட்சியம் இருக்க வேண்டும் என்பதே!

தமிழர்களாகிய நாம் கடந்த காலத்தில் அதிகமாக நடத்தியிருக்கும் போராட்டங்களின் அடிப்படைத் தன்மை என்ன? அவை பெரும்பாலும் இரண்டு வகைத்தன்மை கொண்டவை.

முதன்மையாக, இந்திய அரசின் தமிழர் உரிமைப் பறிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரானவை! அதன், பன்னாட்டு நிறுவன ஆதிக்கப் பொருளியல் கொள்கையால் விளைந்த துன்பங்களுக்கு எதிரானவை!

இரண்டாவதாக, இந்திய அரசின் கங்காணியாகச் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டு உரிமை களைப் பாதுகாக்கத் தவறியதற்கு எதிரானவை! தமிழ்நாட்டு ஆட்சியாளர்களின் ஊழல் நடவடிக்கைகள் ஆகிய வற்றிற்கு எதிரானவை! அத்துடன், இந்திய அரசின் பொருளியல் கொள்கைகளை அப்படியே ஏற்றுச் செயல்படுவதால் ஏற்பட்ட துன்பங்களுக்கு எதிரானவை!

இந்திய அரசு, "இந்தியத் தேசியம்" என்ற ஒருமைவாத ஆதிக்கக் கொள்கை கொண்டுள்ளது. இந்தியத் தேசியம் என்பது சாரத்தில் ஆரிய மரபுப் பெருமை, பார்ப்பனியத் தலைமை, சமற்கிருத – இந்தி ஆதிக்கம்,வடநாட்டு முதலாளியம் ஆகியவற்றை உட்கூறுகளாகக் கொண்டுள்ளது.

இந்திய அரசு குட்டி ஏகாதிபத்திய அரசு. அது உலக ஏகாதிபத்தியங்களின் இளைய பங்காளியாக இணைந்துள்ளது.

இவற்றில் ஆரியம், பார்ப் பனியம், சமற்கிருதம் – இந்தித் திணிப்பு, குட்டி ஏகாதிபத்திய அதிகாரக் குவியல் ஆகியவற்றைத் தொடர்ந்து தமிழினம் எதிர்த்து வருகிறது. ஆரியம், பார்ப்பனியம், சமற்கிருதம் இந்தி, வடநாட்டு அரசியல் தலைமை ஆகியவற்றை ஏற்கத் தமிழ்நாடு மறுத்து வருகிறது.

ஆரிய எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு ஆகிய வற்றிற்குத் தமிழர் வரலாற்றில் மூவாயிரம் ஆண்டு கால பழைமை உண்டு. ஆரியர்களை விரட்டி அடித்த பாண்டியனை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்று புறநானூறு போற்றுகிறது. தமிழர்களை இழிவாகப் பேசிய ஆரிய மன்னர்களான கனகன், விசயன் தலையில், சேரன் செங்குட்டுவன் கல்லேற்றிக் கொண்டு வந்து, கண்ணகிக்கு சிலை எடுத்தான் என்று சிலம்பு பேசுகிறது.

இந்த வீச்சு காலப்போக்கில் குறைந்து பார்ப்பனிய ஆதிக்கம் மேலோங்கினாலும், இன்றுவரை பார்ப்பனிய ஆதிக்க எதிர்ப்பு தமிழ்ச் சமூகத்தின் மூச்சாக உள்ளது. சந்தர்ப்பவாத அரசியல் வாதிகள்கூட பார்ப்பனியத்தை எதிர்க்க வேண்டிய சூழல் உள்ளது.

இந்தித் திணிப்பை எதிர்த்து, 1938 முதல் தமிழினம் போராடி வருகிறது. 1965இல் ஐம்பது நாள் மாணவர் - மக்கள் நடத்திய மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில், முன்னூறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். எட்டுப்பேர் தீக்குளித்தும் நஞ்சுண்டும் மடிந்தனர். இன்றும் இந்தி எதிர்ப்புத் தொடர்கிறது.

**அ.இ.அ.தி.மு.க.வுக்கு மாற்று தி.மு.க. அன்று; சசிகலாவுக்கு மாற்று ஓ. பன்னீர்ச்செல்வம் அல்லர். அ.இ.அ.தி.மு.க., தி.மு.க., சசிகலா, ஓ. பன்னீர்ச்செல்வம் எல்லாம் ஊழல் மற்றும் எதேச்சாதிகாரச் செயல்களில் உடன்பிறவா - உடன் பிறப்புகள்! தில்லிக்குக் கங்காணி வேலை பார்ப்பதில், தமிழினத்தை அடமானம் வைப்பதில் வெட்கப்படாதவர்கள் இவர்கள்!**

#### இந்திய அரசுத் தமிழர்களைப் பழிவாங்குகிறது

எனவே, இந்திய ஏகாதிபத்திய அரசு தமிழினத்தை வஞ்சம் தீர்க்கும் வெறியோடு - தமிழ்நாட்டைப் பழி வாங்கி வருகிறது. தமிழ்நாட்டை - தமிழ் இனத்தைச் சிதைத்துத் தனது காலடியில் அண்டிக் கிடக்கும்படிச் செய்யப் பல்வேறு பழிவாங்கல்களைச் செய்து வருகிறது.

காவிரி, கச்சத்தீவு, முல்லைப் பெரியாறு, பாலாறு என தமிழர்கள் பெற்றிருந்த வரலாற்று உரிமைகளை, அண்டை அயலார் பறித்திட இந்திய அரசு துணை போனது.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப் பளிப்பதாகக் கூறி, தமிழர்கள் நாக்கில் இனிப்புத் தடவி, மிகை எண்ணிக்கையில் வெளிநாட்டு - பன்னாட்டு நிறுவனங்களையும், வடநாட்டுப் பன்னாட்டு நிறுவனங்களையும் தமிழ்நாட்டில் குவித்தது இந்தியா. ஆனால், இவற்றில் அயல் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதிகஎண்ணிக்கையில் வேலையில் சேரும்படிப் பார்த்துக் கொண்டது.

தமிழ்நாட்டில் செயல்படும் இந்திய அரசு நிறுவனங் களிலும் தொழிற்சாலைகளிலும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களையே மிகை எண்ணிக்கையில் வேலையில் சேர்த்து வருகிறது இந்திய அரசு.

தொழில், வணிகம் ஆகிய வற்றிலும் மார்வாரிகள், குசராத்திகள், மலையாளிகள் மற்றும் பல அயல் இனத் தாரின் ஆதிக்கம் மேலோங்கச் செய்து வருகிறது.

தமிழ்நாடு, தமிழர்களின் தாயகம் என்ற நிலையை மாற்றி, கலப்பின மாநிலம் என்ற நிலையை உருவாக்கும் உத்தியுடன் இந்திய அரசு இவ்வாறு இங்கு அயல் மாநிலத்தவர்களைத் திணித்து வருகிறது.

இந்திய ஆட்சியில் காங்கிரசு இருந்தாலும், பா.ச.க. இருந்தாலும் அல்லது வேறு கட்சிகள் இருந்தாலும் தமிழர்களுக்கெதிரான மேற்படி உத்திகளையே கடைபிடிக்கின்றன.

#### தமிழ்நாட்டில் கங்காணி - ஊழல் அரசியல்

தமிழ்நாட்டு அரசியல் நிலை என்ன? இந்திய அரசின் மேற்கண்ட தமிழினப்பகை உத்திகளை எதிர் கொள்ளவோ, அல்லது முறியடிக் கவோ தி.மு.க. ஆட்சியும் முயன்றதில்லை; அ.இ.அ. தி.மு.க. ஆட்சியும் முயன்றதில்லை. சுருக்கமாகச் சொன்னால், தமிழினத் தற்காப்பு அரசியல் இவ்விரு கழகங்களிடமும் இல்லை! அவ்வாறான கொள்கையும் இல்லை. தன்னல ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கொள் வதற்காக,தில்லிக்குக் கங்காணி வேலை பார்க்கின்றன இக் கழ கங்கள்! தனித்தமிழ்நாட்டு வேட் கையை மரபுவழிச் சுமந்து வரும் தமிழர்களை மயக்குவதற் காகவே மாநில சுயாட்சி கோரிக்கையைத் தற்காலிகமாக எழுப்பினார் கருணா நிதி. அவரது இந்தி எதிர்ப்பும் இத்தன்மை வாய்ந்ததே!

தமிழின மரபுத் தொடர்ச்சியாக உள்ள தமிழர் இன உணர்ச்சியை, மொழி உணர்ச்சியைத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வது மட்டுமே தி.மு.க. - அ.தி.மு.க.வின் உத்தியாக உள்ளது.

மற்றபடி இவ்விரு கழகங்களும், இக்கழகங் களின் ஆட்சியும் இந்திய ஏகாதிபத்தியத்தின் தமிழின உரிமைப் பறிப்புச் செயல்களைக் கீழ்ப்படிந்து ஏற்றுக் கொண் டுள்ளன அல்லது ஒப்புக்கு எதிர்ப் புக் குரல் கொடுத்து

விட்டு, அவற்றை ஏற்றுச் செயல்பட்டுள்ளன. கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., செயலலிதா ஆகிய மூன்று பேர் ஆட்சியும் அவ்வாறு தான் நடந்து கொண்டன.





ஆட்சிக் காலத்தில் கருணாநிதியும் செயலலிதாவும் ஊழல் பூதங்களாக செயல்பட்டனர். இதனால் இவர்களுக்கு எதிராக ஊழல் வழக்குகள் வந்தன. கருணாநிதி குடும்பத்தினர் மீதும் செயலலிதா - சசிகலா குடும்பத்தினர் மீதும் ஊழல் வழக்குகள் இன்றும் இருக்கின்றன. எனவே இந்திய அரசுக்கு அஞ்சியே செயல்பட வேண்டிய தனிப்பட்ட சிக்கல்கள் இவர் களுக்கு இருக்கின்றன.

அரசு எந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி கருணாநிதி குடும்பத்தினரும், செயா - சசி குடும்பத்தினரும் தமிழ்நாட்டில் அங்கங்கே செயல்படுத்திய சர்வாதிகார நடவடிக்கைகள் மற்றும் அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல!

தி.மு.க. ஆட்சி செய்யும் போது, செயா - சசி குடும்பங்களின் ஊழல், சர்வாதிகாரம், அட்டூழியம் போன்றவை மறந்து போவதும் - அ.இ.அ.தி.மு.க. ஆட்சி செய்யும் போது, கருணாநிதி குடும்பங்களின் ஊழல், சர்வாதிகாரம், அட்டூழியம் ஆகியவை மறந்துபோவதும் மக்களின் பலவீனம்! ஆனால், மக்களுக்கு வழிகாட்டிடச் சிந்திப்போர்க்கு, செயல்படுவோர்க்கு அந்த பலவீனம் வரக்கூடாது!

**கங்காணி – ஊழல் அரசியல்வாதிகளுக்குள் மாற்றா?**

செயலலிதா காலமாகி விட்ட நிலையில், அ.இ. அ.தி.மு.க.வுக்கு மாற்று தி.மு.க. என்று சிந்திப்பதோ, தி.மு.க.வுக்கு மாற்று அ.இ.அ.தி.மு.க. என்று சிந்திப்பதோ, எந்த வகையில் சரியான உத்தி? செயலலிதா வாரிசு சசிகலா என்று ஏற்பதோ அல்லது பன்னீர் என்று ஏற்பதோ எந்த வகையில் ஞாயம்? எந்த வகையில் சரியான சிந்தனை?

செயலலிதாவின் நிழலின் கீழ் நின்று செயல்பட்ட போதே, சசிகலா குடும்பத்தினரின் சர்வாதிகாரமும் ஊழலும் சகிக்க முடியாதவையாக இருந்தன. இப்போது நேரடியாக சசிகலா ஆட்சி வந்துவிட்டால் அவரது குடும்பங்களின் ஊழலும் அட்டூழியங்களும் உச்சந் தொடும்!

இவ்வாறு கூறுவதால், ஓ. பன்னீர்ச்செல்வம் பரவாயில் லை என்று சொல்வதாகப் பொருள் இல்லை. அவரும் ஊழல் பெரும் புள்ளியே! அவர் குடும்ப ஊழலும் அத்துமீறலும் அதிகம்!

அ.இ.அ.தி.மு.க.வுக்கு மாற்று தி.மு.க. அன்று; சசிகலாவுக்கு மாற்று ஓ. பன்னீர்ச்செல்வம் அல்லர். அ.இ.அ.தி.மு.க., தி.மு.க., சசிகலா, ஓ. பன்னீர்ச்செல்வம் எல்லாம் ஊழல் மற்றும் எதேச்சாதிகாரச் செயல்களில் உடன்பிறவா - உடன் பிறப்புகள்! தில்லிக்குக் கங் காணி வேலை பார்ப்பதில், தமிழினத்தை அடமானம் வைப்பதில் வெட்கப்படா தவர்கள் இவர்கள்!

செயலலிதா காலமானதால் எழுந்துள்ள புதிய சூழலையும் அ.இ.அ.தி.மு.கவின் குழுச் சண்டைகளையும் பயன் படுத்திக் கொண்டு, பா.ச.க. தமிழ்நாட்டில் வெகு மக்கள் ஆற்றலாய் வளர்ந்திடச் சூழ்ச்சிகள் செய்வது உண்மை. நடுவண் ஆட்சியின் அதிகாரத்தை அதற்குப் பயன்படுத்துகிறது.

பா.ச.க. என்றால் பார்ப்பனிய சனதா கட்சி! அதாவது, இந்துத்துவா கட்சி!

தமிழ்நாட்டில் இப்பொழுது உருவாகியுள்ள அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, பா.ச.க. வளர்ந்திடுமே என்ற கவலை நம்மில் பலரிடம் இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க.வில் எழுந்துள்ள பதவிப் போட்டியில், ஓ. பன்னீர்ச்செல்வத்தை முதல்வர் பதவிக்கு ஆதரித்து, அவரைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் பா.ச.க.வை வளர்க்கலாம் என்று இந்துத்துவா பார்ப்பனிய பரிவாரங்கள் திட்டமிடுகின்றன.

இந்த நிலையில் பன்னீர்ச்செல்வத்தை வீழ்த்தி சசிகலாவை ஆதரிப்பதுதானே சரியான உத்தியாக இருக்கும் என்று நண்பர்கள் கருதக்கூடும்.

செயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. பா.ச.க.வின் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்ட கட்சி என்று



வெங்கய்யா நாயுடு கூறி வருகிறார். இந்த நிலையில், சசி என்ன பன்னீர் என்ன? இருவரும் பா.ச.க.வுக்குப் பக்க வாத்தியம் வாசிக்கத் தயங்கமாட்டார்கள்.

குறைந்த அபாய கட்சி ஆதரவு வியூகப் போராளி ஆசிரியர் வீரமணி அவர்களும், சசிகலாவுக்கு ஆதர வாகக் குரல் கொடுத்துவிட்டார். யார் வர வேண்டும் என்பதைவிட யார் வரக்கூடாது என்பதே இப்போதைய நெருக்கடிக்கு விடை என்பது வீரமணி அவர்களின் நிரந்தரப் போர்த்தந்திரம்!

இவ்வாறான உத்தியானது நிலவுகின்ற இதே சமூகச் சூழலை அப்படியே நீடிக்கும் (Status Quo Maintaining) விளைவையே உண்டாக்கும். இப்பொழுது ஒப்பீட்ட ளவில் சிறிய அபாயமாக இருக்கும் பிரிவிடம் அதிகாரம் போனால், காலப்போக்கில் அதுவே பெரிய அபாயமாக மாறும்.

சசிகலா இந்துத்துவா எதிர்ப்பாளரும் அல்லர்; வர்ண - சாதி எதிர்ப்பாளரும் அல்லர்; பார்ப்பனிய எதிர்ப்பாளரும் அல்லர்! எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நேர்மையாளரும் அல்லர்.

ஆனால், ஆசிரியர் வீரமணி அவர்கள் சசிகலாவின் தகுதிகளை வர்ணித்து, அவரே அடுத்து அ.தி.மு.க. தலைமையேற்க வேண்டும் என்கிறார். “சசிகலா கடந்த பல ஆண்டுகளாக வெற்றி - தோல்விகளில் அ.தி.மு.க. வின் பொதுச் செயலாளர் செயலலிதா எப்படிப்பட்ட வியூகங்களை வகுத்தார், எந்தெந்த அஸ்திரங்களை எவ்வெப்போது யார் யார் மீது ஏவினார் என்பதை யெல்லாம் நீக்கமற அவருடன் இருந்து புரிந்தவர் மட்டுமல்ல; அச்செயல் வடிவம் எடுக்கப் பெரும் பங்காற்றியவர் சசிகலா என்பதை எவரே மறுப்பார்? குழப்பம் விளைவிக்க முயலும் இனப்பகைவர்களை, அரசியல் எதிரிகளை அடையாளம் கண்டு எதிர் கொள்ள சசிகலாதான் ஆற்றல் படைத்தவர்“ என்கிறார் ஆசிரியர் வீரமணி (அறிக்கை, 27.12.2016).

குழப்பம் செய்யும் இனப்பகைவர்களை எதிர்த்திடும் ஆற்றல், மூத்த திராவிட இயக்கத் தலைவர் வீரமணி யாரிடம் இல்லை. அந்த ஆற்றல் சசிகலாவிடம் இருக்கிறது என்கிறார்.

சசிகலாவின் புறக்காவல் தளபதிகளாக இடதுசாரி அரசியலில் தோழர் தா. பாண்டியன்; இன அரசியலில் ஆசிரியர் வீரமணி!

### வெள்ளையர் ஆட்சியும் ‘‘நம்மவர்’’ ஆட்சியும்

இந்தியா விடுதலை பெற்றபின் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சிகள் தொடங்கி இன்றுள்ள ஆட்சி வரை தமிழர்களுக்குப் பட்டறிவு இருக்கிறது. வெள் ளையர் ஆட்சியிலிருந்த உரிமைகள் “நம்மவர்“ ஆட்சி யில் பறிபோன வரலாறுதான் விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழ்நாட்டின் பட்டறிவு!

வடக்கெல்லை - தெற்கெல்லை மீட்புப் போராட் டங்களைத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் அந்தந்த பகுதிகளில் வாழ்ந்த காங்கிரசுக்காரர்களே! அவர் களையும் அவர்கள் போராட்டத்தையும் தமிழ்நாட்டில் அப்போதிருந்த காங்கிரசு ஆட்சி ஆதரிக்கவில்லை. அவர்களை அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமையும் ஆதரிக்கவில்லை. அதிகாரப்படியான காங்கிரசுக்கு வெளியே இருந்து கொண்டு தான், அந்த காங்கிரசார் எல்லை மீட்புப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினர். ஓரளவு தமிழ்ப் பகுதிகளை மீட்டுக் கொடுத்தனர்.

காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு, நெய்யாற்றின் கரைக் கால்வாய், சிறுவாணி, செண்பகவல்லி என தமிழ்நாட்டு ஆற்று நீர் உரிமைகள் பறிபோன வரலாறு, விடுதலை பெற்ற இந்தியாவில்தான் நடந்தன. காங்கிரசு, தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகளால் அந்த உரிமைகளை மீட்க முடியவில்லை.

### இனப்பாதுகாப்பற்ற அரசியல்

கடந்த பல ஆண்டுகளாக நாம் அறிந்து வரும் ஓர் உண்மை உண்டு. இந்தியாவிலேயே இனப் பாதுகாப்பு அரசியல் இல்லாத ஒரே மாநிலம், தமிழ்நாடுதான்!

*ஏழரைக் கோடி தமிழர்கள் தமிழ்நாட்டில் இருந்தும், இந்திய அரசின் பங்களிப்போடு ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது, தமிழ்நாட்டால் அதைத்தடுக்க முடியாமல் போன தெப்படி?*

*தி.மு.க. - அ.தி.மு.க. கட்சிகளின் மறைமுக ஆதர வோடுதான் அந்த இனப்படுகொலை நடந்தது. அப்பாவித் தமிழர்களை ஏமாற்ற ஒப்புக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தன தி.மு.க.வும் அ.தி.மு.க.வும்! தமிழ் நாட்டுக் காங்கிரசு அந்த இனப்படுகொலையை ஆதரித்தது.*

*தென்கடலில் அன்றாடம் சிங்களப் படையாட் களால், தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். தமிழ்நாட்டு மீனவர்களைப் படகுகளுடன் கடத்திச் செல்கின்றனர், சிங்களப் படையாட்கள். ஏற்கெனவே அறுநூறுக்கும் மேற்பட்ட மீனவர்களைச் சுட்டுக் கொன்றனர் சிங்களர்கள்.*

*இந்தியாவில் வேறு எந்த மாநில மீனவர்களாவது, இது போல் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தால் - தங்கள் சொந்தக் கடலில் மீன்பிடிக்க அண்டை நாடு தடை போட்டிருந்தால், இந்திய அரசு இது போல் கண்டும் காணாமல் இருந்திருக்குமா? அவ்வாறு இருந்திருக்காது! அரபிக்கடலில் இரண்டு கேரள மீனவர்களை சுட்டுக் கொன்ற இத்தாலியக் கப்பற் படையினரைத் தளைப்படுத்தி சிறையில் அடைத்தது, இந்திய அரசு.*

*பாக்கித்தானிலிருந்து மீனவர் வேடத்தில் படகில் வந்து மும்பையில் முகாமையான இடங்களில் துப் பாக்கிச் சூடு நடத்தி, அப்பாவிப் பொது மக்கள் 196 பேரை படுகொலை செய்தனர் பயங்கரவாதிகள். அதற் காக இந்தியாவின் எல்லை தாண்டி, அரபிக் கடலில் வரும் பாக்கித்தான் மீனவர்களை இந்தியப்படை தொடர்ந்து சுட்டுக் கொல்கிறதா? தாக்குகிறதா? இல்லை! கைது செய்கிறது, பிறகு விடுவிக்கிறது!*

**தமிழ் இனத்தைப்போல் அரசியல் பாது காப்பற்ற இனம் இந்தியாவில் வேறெந்த இனமும் இல்லை. சுருக்கமாகச் சொன்னால், தமிழினத்தின் மீது இந்திய அரசு கொண்டுள்ள வரலாற்று வழிப் பட்ட இனப்பகை போல், வேறெந்த இனத்தின் மீதும் இந்திய அரசு வரலாற்றுப் பகை கொண்டிருக்கவில்லை! அதேபோல், தமிழ்நாட்டுக் கட்சிகளைப் போல், தலைவர்களைப் போல், மண் ணுக்குரிய இனத்தை அடமானம் வைத்து அரசியல் இலாபம் ஈட்டும் தலைவர்களும் கட்சிகளும் இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லை!**

**1970க்குப் பிறகு தமிழ்நாட்டில்தான், தலைவர் களுக்குக் கடவுளைப் போல் "பக்தி" செலுத்தப் படுகிறது. அவர்களின் பெயரைச் சொன்னால் "அபச்சாரம்"! அவர்களின் பூதந்தாங்கிப் பட்டங்களைச் சொல்லி மட்டுமே விளிக்க வேண்டும்!**

**அதேபோல், ஆட்சியைப் பயன்படுத்தி, இந்தியா விலேயே அதிகம் கொள்ளையடித்தத் தலைவர்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றனர்.**

**இவர்கள்தான், தமிழர் உரிமைகளைக் காவு கொடுத்தவர்கள்.**

**1947 ஆகத்து 15 தொடங்கி 2017 சனவரி தொடக்கம் வரை உள்ள இந்தப் பட்டறிவுதான் தமிழர்களின் எதிர்காலத்திற்கு சரியான வழி காட்ட வேண்டும். தமிழ்நாட்டில் இப்பொழு துள்ள கட்சிகளில் ஒன்றை ஆதரிப்பது அல்ல - தமிழ் இனத்தின் தற்காப்புக்கான வழி! தமிழினத் தற்காப்பு இலட்சியம் கொண்ட - அழுகிப் போகாத புதிய ஆற்றல்களை ஒருங்கிணைத்து உருவாக்கும் புதிய அரசியல்தான் சரியான தீர்வு!**

*"**புதிய அரசியல்**" பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.*

### *புதிய இலட்சியம் - புதிய அரசியல்*

*தமிழினத்தின் புதிய அரசியல் தமிழினப் பகைவர் களின் ஆதிக்க அரசியலுக்கு எதிரானது; தமிழினத்தை அடமானம் வைத்து அரசியல் கொள்ளை நடத்தும் தமிழினத் துரோகக் கட்சிகளுக்கும் மாற்றானது!*

*பகைவர்களின் அரசியல் இந்தியத்தேசியத்தை அடித்தளமாகக் கொண்டது. அதை எதிர்க்கும் தமிழர்களின் அரசியல் தமிழ்த்தேசியத்தை அடித்தள மாகக் கொள்ள வேண்டும். தமிழினத்தை அடமானம் வைத்து, அரசியல் கொள்ளை நடத்துவோர் திரா விடத்தை முன்வைத்துள்ளனர். திராவிடத்துக்குச் சரியான மாற்று தமிழ்த்தேசியமே!*

*இந்தியத்தேசியத்தை அடித்தளமாகக் கொண்டி ருப்பது, காங்கிரசு, பா.ச.க. மட்டுமல்ல! கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் உள்ளிட்ட வேறு சில இடதுசாரி அமைப்பு களும் இந்தியத்தேசியத்தின் அடித்தளத்தின் மீதே நிற்கின்றன. முற்போக்கானவை என்றாலும் அவை தமிழ்த்தேசியத்தை எதிர்க்கின்றன அல்லது ஆதரிக்க வில்லை. அதனால் அவர்களை தமிழினத் தற்காப்பு அரசியலின் நட்பு ஆற்றல்களாகக் கருத வாய்ப்பில்லை.*

*சாதி அடித்தளத்தில் அமைப்பு நடத்துவோர் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் பிரதிநிதிகளாக இருக்க முடிவதில்லை.*

*சாதி, மத வேறுபாடின்றி அனைத்துப் பிரிவு தமிழ் மக்களிலும் இருந்து புதிய ஆற்றல்கள் எழுந்து தமிழ்த்தேசியத்தைக் கையில் ஏந்த வேண்டும்!*

*தமிழ்த்தேசியம் என்றால் என்ன?*

**எமது தேசிய இனம் தமிழர்!**

**எமது தேசிய மொழி தமிழ்!**

**எமது தேசம் தமிழ்த்தேசம்!**

**எமது இலக்கு இறையாண்மையுள்ள தமிழ்த் தேசம் –_ அறஞ்சார்ந்த சமூக அமைப்பு!**

இதுதான் தமிழ்த்தேசியத்தின் வரைவிலக்கணம்!

*தமிழர் அறம் என்பது என்ன?*

மனிதர்கள் அனைவரும் சமம்! தமிழர்கள் அனைவரும் சமம்! ஆண்களும் பெண்களும் சமம்! சமத்துவப் பொருளியல் கொள்கை!

தீண்டாமை ஒழிப்பு - சாதி ஆதிக்க நீக்கம் - மதச்சார்பின்மை; இறை ஏற்பும் மறுப்பும் அவரவர் அடிப்படை உரிமை!

தொடக்கக் கல்வியிலிருந்து ஆய்வுக்கல்வி வரை தமிழ்வழியில் வழங்குவது, தமிழ் கட்டாய மொழிப் பாடமாக இருப்பது, விரும்புவோர் ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளைக் கற்க வாய்ப்பளிப்பது;

தமிழ்நாட்டில் இந்திய அரசு அலுவலகம் - தமிழ்நாடு அரசு அலுவலகம் அனைத்திலும் தமிழ் மொழி மட்டுமே அலுவல் மொழி யாக இருப்பது;

இயற்கை வேளாண்மை, சூழலியல் பாதுகாப்பு, தமிழர் மரபுவழி மருத்துவம், தமிழர் மரபுவழி வாழ்வியலின் சிறந்த கூறுகள் போன்றவற்றைப் புதுப்பிப்பது,

மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர் ஆகியோர்க்குச் சிறப்புரிமைகள்.

அனைவர்க்கும் வேலை; வேலை வழங்கும் வரை அனைவர்க்கும் வாழ்வூதியம்.

தமிழ்நாட்டு அரசுத் துறையில் 100 விழுக்காடு வேலையும் தமிழர்களுக்கே! தனியார் துறையிலும் இந்திய அரசுத் துறையிலும் 90 விழுக்காடு வேலை தமிழர் களுக்கே!

தொழில், வணிகம் ஆகிய வற்றில் தமிழர்கள் முன்னேற சிறப்பு ஏற்பாடுகள்; முன்னு ரிமைகள்!

தமிழ்நாட்டுச் சந்தையை உயிரோட்டமாகப் பாது காத்தல்.

வேளாண் விளை பொ ருட்களுக்கு இலாபவிலை! தொழில்துறைக்கு இணையாக வேளாண் துறையும் வளர்தல்.

மண்டல அடிப்படையில் சிறுவீத உற்பத்தி முறையைப் பரவலாக்குதல்; சுற்றுச்சூழல் கெடாத தொழிற் கொள்கை!

இலட்சியங்களையும் உடனடிக் கோரிக்கைகளையும் அடைய சனநாயக வழியில் வெகு மக்கள் போராட்டங்கள் நடத்துவது!

தமிழ்த்தேசியப் பேரியக்கம் முன்வைக்கும் தமிழ்த் தேசியத்தின் சாரம் இதுதான்!

தமிழ்த்தேசியம் பேசும் எல்லோரும் மேற்கண்ட இலட்சியங்களை, கொள்கைகளை ஏற்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இலட்சியம் எவ்வளவு தூய்மையாக இருந்தாலும் அதிலும் சீர்குலைவாளர்களும் தன்னல வாதிகளும் புகுந்துவிடுவர். தமிழ்த்தேசியம் அதற்கு விதிவிலக்கன்று! உண்மையான தமிழினப் பற்றாளர்கள் தாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பதவி அரசியலுக்குத் தமிழ்த் தேசி யத்தைப் பயன் படுத்துவோரை மக்கள் ஆதரிக்கக் கூடாது!

மேற்கண்ட நெறி சார்ந்த இலட்சியங்களைக் கொண்ட தமிழ்த்தேசியப் பேரியக்கம், ஒட்டுமொத்தத் தமிழ் நாட்டுத் தமிழர்களின் சிறந்தப் பிரதிநிதியாக தன் னைக் கருதுகிறது. அத் திசையில் செயல்பட உறுதி பூண் டுள்ளது. பணம் - பதவி - விளம்பரம் மூன்றுக்கும் ஆசைப்படாதவர்களின் இயக்கமாக விளங்க வேண்டும் என்பதில் பிடிவாதமாய் உள் ளது.

தமிழ்த்தேசியப் பேரியக்கம், தேர்தலில் போட்டியிடாது. அதேவேளை தமிழ்நாட்டில் தேர்தலே கூடாது என்பது இதன் கொள்கையன்று. மேற் கண்ட இலட்சியமும் நடை முறையும் கொண்ட தேர்தல் இயக்கமொன்று உருவானால் வரவேற்கும்.

தமிழ்த்தேசியம் இரு தளங் களில் செயல்பட வேண்டும். ஒன்று அடித்தள அரசியல்; இது தேர்தலில் போட்டியிடாத வெகு மக்கள் இயக்கம். இன்னொன்று மேல்தள அரசியல்; இது மேற்கண்ட இலட்சியங்கள் நடைமுறை களுடன் தேர்தல் அரசிய லையும் இணைத்துக் கொண்டது.

முதலில் அடித்தளத் தமிழ்த்தேசிய அரசியலே அமைப்பாற்றலுடன் வளர வேண்டும். அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக மேல் தளத் தமிழ்த்தேசிய அரசியல் வளர வேண்டும். பதவி வேட்டையாட தமிழ்த் தேசியத்தைப் பயன்படுத்தும் போலிகள், இந்தவகைப் பிரிவில் வர மாட்டார்கள்.

**தமிழ்த்தேசியப் பேரியக்கம்**

இத்திட்டத்தை முன்வைக்கும் தமிழ்த்தேசியப் பேரியக்கம், தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மாவட்டங்களில் அமைப்பு வழியாகச் செயல்பட்டு வருகிறது. முழுநேரச் செயல்பாட்டாளர்கள் பலர் இருக்கிறார்கள். மாதமிருமுறை இதழ் (தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம்) தொடர்ந்து வெளிவருகிறது.

தமிழ்த்தேசியப் பேரியக்கம் - தமிழ்நாடு தழுவிய அளவில், உரிமைப் போராட்டங்கள் நடத்தி வருகிறது. காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, செண்பகவல்லி உள்ளிட்ட உரிமைப் போராட்டங்கள் நடத்தி வருகிறது.

புதிய போராட்ட வடிவங்கள் பலவற்றை தமிழ்த்தேசியப் பேரியக்கம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

காவிரி உரிமை மீட்பில், 1991இல் முதல் முதலாக நெய்வேலி அனல் மின் நிலையத் தலைமை நிர்வா கத்தை முற்றுகையிட்டு, கர்நாடகத்திற்குச் செல்லும் மின்சாரத்தை நிறுத்த வலியுறுத்திப் போராடிய தோழர்களை கடலூர் சிறையில் அடைத்தார்கள். அதே ஆண்டில், நரிமணம் பெட்ரோலிய ஆலையை முற்றுகையிட்டுப் போராடியது.

"மண்ணின் மக்களுக்கே வேலை - வெளியாரை வெளியேற்றுவோம்" போராட்டங்களை நடத்தி வருகிறது. தமிழ்மொழி உரிமைக்கு, தனியாகவும் கூட்டாகவும் போராடி வருகிறது. சென்னை - திருச்சி நான்குவழிச் சாலையில் இந்தி வழிக்குறிப்புகளை அழிக்கும் போராட்டத்தில் பங்கேற்றது. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்திட அரசுப் பேருந்துகளிலுள்ள ஆங்கில எழுத்துகளை அழித்து, கோயம்பேட்டில் குருதிச் சிந்தினர் எமதியக்கத் தோழர்கள்!

ஈழ விடுதலைப் போராட்டத்தில், பல தோழர்கள் பலமுறை சிறை சென்றார்கள். சென்னையில் இலங்கை வங்கி திறக்கப்பட்ட போது, அதை மூடிப் போராடி இரத்தம் சிந்தினர், எமது இளைஞரணித் தோழர்கள்!

தமிழ்த்தேசியப் பேரியக்கத்திற்கு, ஒரு நபர்த் தலைமையன்று; கூட்டுத்தலைமை; தங்கள் செயல் திறனால், அறிவுத் திறனால், தமிழ் மக்களுக்குத் தங்களை ஒப்படைத்துக் கொள்ளும் உறுதியால், தலைமைப் பண்பால் பலர் தலைவர்களாக வளர்ந்து வரத் தடை இல்லை!

தமிழுணர்வாளர்களே,

பின்பற்றுவது எளிது; சொந்தமாக சிந்திப்பது சிறிது கடினம்; விமர்சிப்பது நன்று; ஆனால் சரியான மாற்றை உருவாக்குவதுதான் வரலாற்றின் திருப்புமுனை; புதிய வரலாற்றை உருவாக்குவோர் புதிய வரலாற்றின் நாயகர்கள் ஆவர்!

நம்மால் முடியுமா என்ற ஐயம் தேவையில்லை. நம்மால்தான் முடியும் என்ற உண்மையை உணர வேண்டும். ஒவ்வொருவர் மனத்திலும் மாற்றம் இருக் கிறது.

ஏற்கெனவே முற்பகுதியில் தமிழ்நாட்டில் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் இயக்கங்கள் பற்றி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றில், மனித உரிமை, மொழியுரிமை, இன உரிமை, பெண்ணுரிமை, இயற்கை வேளாண்மை, சூழலியல், ஊழல் எதிர்ப்பு முதலிய பலத் தளங்களில் போராடிக் கொண்டிருப்பவர்கள் தங்களுடைய போராட்ட எல்லை, தமிழ்த்தேசத் திற்குள்தான் இருக்கிறது என்பதை உணர்ந்துள் ளார்கள். தமிழ்த்தேசம் என்பது வெறும் நிலத்தையும், உதிரி மனிதர்களையும் கொண்டதல்ல! அது ஒரு இனத்தின் தாயகம்! அதற்கான வரலாறு, அரசியல், பண்பாடு, அறம் ஆகியவை இருக்கின்றன. இன்று போராடும் எல்லோருக்கும் உரிய கருத்துகளை நம் முன்னோரிடமிருந்தும் பெறலாம். அப்படிப்பட்ட வளமான மொழியாகவும், அறிவியல் சார் மொழியாகவும், வரலாற்றுப் பெருமிதம் கொண்ட இனமாகவும், தமிழும் தமிழர்களும் இருக்கிறோம்.

எனவே, இந்த உரிமைப் போராட்டங்களில் ஈடுபடுவோர் இந்தியத்தேசிய அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவோர், அந்த அரசு ஏந்தும் இந்தியத்தேசியத்திற்கு மாற்றாக தாங்கள் தமிழ்த்தேசியத்தை ஏந்த வேண்டும் என்ற புரிதலுக்கு வர வேண்டும்.

ஒரு சிக்கல் என்பது ஒட்டு மொத்த சமூக சிக்கல்களின் ஒரு பகுதியாகத்தான் இருக்கிறது. அப்படி ஒட்டுமொத்த தமிழ் இனத்தோடு தமிழ் மொழியோடு தன்னை இணைத்துக் கொண்டு போராடும்போதுதான், எந்தவகை தனிச்சிக்கலுக்கான இயக்கமும் போராட் டமும் ஒட்டுமொத்த மக்களின் ஆதரவைப் பெறும்.

நிலவுகின்ற சமூக அவலங்களைக் கண்டு, தனிநபராய் குமுறிக் கொண்டிருக்கும் நண்பர்கள் தமிழ்ச் சமூகத்தைத் தட்டி எழுப்ப, தங்களுக்கும் வரலாற்றுக் கடமை இருக்கிறது என்பதை ஏற்க வேண்டும்! அவர்கள் ஏந்த வேண்டிய புது இலட்சியம் தமிழ்த்தேசியமே!

சமூகம் தழுவிய பொது இலட்சியத்தோடு இணைக்கப்படாமல், தனித் தீவுபோல் நடத்தப்படும் போராட்டங்கள், ஒரு தொழிற்சங்க வாதம் போல் முடங்கிவிடும்! எனவே, செயல்துடிப்புள்ள அனைவருக் குமான பொது இலட்சியம் தமிழ்த்தேசியமே!

எத்தனை பேர் நம் பின்னால் வருகிறார்கள் என்று திரும்பிப் பார்த்து சோர்வடைய மாட்டார் இலட்சிய வாதி. ஏற்ற இலட்சியத்தை எடுத்துச் செல்வார்; அந்தப் பயணத்தில் அவருடன் நிறையத் தோழர்கள் சேர்ந்து கொள்வார்கள்.

புழுக்கம் நிறைந்த பகற்பொழுதில், அசையாது நின்ற காற்றை ஒரு மின்விசிறி அசைத்து வேகமாக சுழலச் செய்கிறது. அது போன்ற ஆற்றல் ஒவ்வொரு தனி நபரிடமும் இருக்கிறது.

நம் உடனடி இலக்கு, தமிழ்த்தேசியத்தில் உறுதியான தெளிவான ஆண்களும் பெண்களும்

கொண்ட தமிழ்த்தேசியப் பேரியக்கத்தை தமிழ்நாடெங்கும் விரிவுபடுத்துவதுதான்! நாம் நமது பேரியக்கத்தை வலுவாக வளர்த்த பின்னும், தி.மு.க. - அ.தி.மு.க. போன்ற பெரிய கட்சிகள் வெகு மக்கள் ஆதரவோடு இருக்கலாம்.

ஆனால், அவை கங்காணிக் கட்சிகளாக - ஊழல் கட்சிகளாக - இலட்சியமற்ற கட்சிகளாக இருப்பதால், உள்ளாற்றலற்ற ஒதிய மரம் போல் பருமனாக இருக்கும் அல்லது மாரியம்மன் கோவில் யானையைப் போல் இருக்கும். வலிமையாக இருக்காது!

தெளிவான இலட்சியமும், மக்களை மையப் படுத்திய செயல்பாடுகளும், வலிமையான கட்டமைப்பும் கொண்ட புதிய இயக்கம், தி.மு.க., அ.தி.மு.க. போல், பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களை சேர்த்துத் தான் வரலாற்று மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதில்லை!

எடுத்துக்காட்டாக, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட வலியுறுத்தி, 10,000 பேர் கொண்ட பேரணியை சென்னையில் தமிழ்த்தேசியப் பேரியக்கம் தனித்து நடத்தும் ஆற்றலைப் பெற்றால், அதன் அழுத்தம் தமிழ்நாட்டுக் கட்சிகளை மட்டுமின்றி, தில்லி அரசையும் தாக்கும்! உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கும் நடுநிலைக்கு இந்திய அரசைத் தள்ளும்!

பதவி - பணம் - விளம்பரம் - மூன்றுக்கும் ஆசைப் படாமல், தெளிவான இலட்சியப் பதாகை ஏந்தி, உறுதியாகப் போராடும் மக்களின் ஆற்றல் - அதற்கு உண்டான தாக்கத்தை உருவாக்கும்! மேலும் மேலும் மக்கள் ஆதரவைப் பெருக்கும்!

இத்திசையில்தான், தமிழ்த்தேசியப் பேரியக்கம் செயல்படுகிறது!

நம் பேராசான் திருவள்ளுவப் பெருந்தகை கூற்றை நினைவில் கொள்ளுங்கள்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

ஒரு செய்தியை ஆராய்ந்து தெளியாமல் ஏற்பது தீராத துன்பந்தரும்; ஆராய்ந்து தெளிந்த பின் அதை ஏற்காமல் ஐயப்படுவது அதேபோல் தீராத துன்பந்தரும் என்றார் பேராசான்!

இவ்விருவகைத் துன்பம் தனிநபருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கும் ஏற்படக் கூடாது.

தெளியுங்கள்! துணியுங்கள்! கைகோப்போம்! தமிழினத் தற்காப்பு அரசியலை வளர்ப்போம்!

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்**

*- குறள், 517.*



## கீழவெண்மணி ஈகியருக்கு வீரவணக்கம்!

1968ஆம் ஆண்டு, நாகை மாவட்டம்– கீழ வெண் மணியில் நிலக் கிழமை சாதி ஆதிக்க வெறியர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட 44 உழவுத் தொழிலாளி களின் நினைவகத்தில், 25.12.2016 அன்று, தமிழ்த் தேசியப் பேரியக் கம் சார்பில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசியப் பேரியக்க மூத்த தோழர் இரா. கோவிந்த சாமி, ஒன்றியச் செயலாளர் தோழர் ப. சிவவடிவேலு, தமிழக உழவர் முன்னணி செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. தனபாலன், தோழர்கள் தை. செயபால், கா. பாலசுப்பிர மணியன், கா. அரசு, கா. சித்திரைச்செல்வன், ச. கோவிந்த சாமி, கீ. இசைவாணன், ச.பொ. முருகையன், சி. வைரக்கண்ணு, மு. பாரதி, நா. ஞானசேகரன், வழக்கறிஞர் இ. தனஞ்செயன், இரஜினி, உள்ளிட்ட தோழர்கள் பேரணி யாகச் சென்று, நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினர். ■




### பாடமாகவும் விளங்கிய கட்டுரை

தமிழர் கண்ணோட்டம் இதழ் படித்தேன். அமெரிக் காவில் நடைபெற்ற உலகத் தமிழர் அமைப்பு மாநாட்டில், தோழர் பெ.ம. அவர்களின் உரை என் மனத்தை ஈர்த்தது. அய்யாவின் கருத்தில், தண்ணீருக்குள் கிடந்தாலும் பாஸ்பரஸ் நெருப்பாகவே கனன்று கொண்டிருக்கும் என்ற கருத்து மிகவும் அருமை!

நவம்பர் 16 - 30 இதழில், ஆசிரியர் பெ.ம. அவர்கள் எழுதிய, “டிரம்ப் வெற்றியும் இன அரசியலும்” கட்டுரை, தமிழர்களுக்கு ஒரு பாடமாகவும் இருந்தது. பாவலர் முழுநிலவன் அவர்களின், மழை குறித்த சிறுவர் பாடல், சிறப்பு!

*- திருச்சி செல்வா, திருச்சி - 19.*

### வரவேற்புக்குரிய நிலைபாடு

பொது சிவில் சட்டம் குறித்த நமது நிலைப்பாடு வரவேற்புக்குரியது. பாதிக்கப்படும் மணமான பெண் களுக்கு அளிக்கும் அறிவுரை, இரத்தினச்சுருக்கம்! தமிழ்த்தேசியத்தின் சனநாயகப் பாங்கு விரிவானது என்பதற்கு, பொது சிவில் சட்டம் குறித்த நிகரன் விடை சிறந்த சான்றாக விளங்குகிறது.

*- செ. ஏந்தல், சென்னை - 17.*



க.அருணபாரதி

# இந்தியாவில் ஈழ ஏதிலியருக்கு இனப்பாகுபாடு!

கடந்த 2016 - திசம்பர் 21 அன்று, இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், பாக்கித்தான் உள்ளிட்ட இந்தியாவின் “அண்டை“ நாடுகளிலிருந்து வரும் ஏதிலியர்கள், இந்தியக் குடியுரிமைப் பெறுவதற்கான பதிவுக் கட்டணத்தை, 15,000 ரூபாயிலிருந்து, வெறும் 100 ரூபாயாக அதிரடியாகக் குறைத்து அறிவித்தது. இதற்கென 2009ஆம் ஆண்டு குடியுரிமை விதிகளில் இதற்கெனத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாக்கித்தான் - ஆப்கானித்தான் - வங்கதேசம் ஆகிய “இசுலாமியர்” ஆதிக்க நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வரும் “இந்து” ஏதிலியர்களுக்கு, இந்தியக் குடியுரிமை வழங்குவதை ஊக்குவிப்பதற்கான பா.ச.க. இந்துத்துவா அரசின் நடவடிக்கை இது என்றாலும், சிங்கள பவுத்தப் பேரினவாத அரசால் இனப்படு கொலை செய்து ஒடுக்கப்பட்டு வரும் - தமிழீழத் தமிழர்களை “சிறுபான்மை இந்து”க்களாகக்கூட ஏற்க மாட்டோம் என இந்திய அரசு கைவிட்டுள்ளதையும் இந்நடவடிக்கை அறிவிக்கிறது.

இதற்கு முன்பே, கடந்த 2016 சூலையில் (19.07.2016), இதற்கு முன்னோட்டமாக, 1955ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தில் சில திருத்தங்களை இந்திய அரசு மேற்கொண்டது. இந்தியாவிற்குள் கடவுச்சீட்டு இல்லாமல் நுழையும் அயல் நாட்டவரையும், விசா காலம் முடிந்தும் தங்கியிருக்கும் அயல் நாட்டவரையும் “சட்ட விரோதக் குடியேறி” எனக்கூறும் இச்சட்டத்திலிருந்து, “மதச் சிறுபான்மையினர்” என்ற பெயரில், சிலருக்கு விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, பாக்கித்தான், வங்கதேசம், ஆப்கானித் தான் ஆகிய மூன்று நாடுகளும், இந்தியாவின் "அண்டை" நாடுகள் என வரையறுக்கப்பட்டன. இந்தியாவிற்கு தஞ்சம் கேட்டு வந்துள்ள இந்நாடு களின் ஏதிலியர்கள் - இந்தியக் குடியுரிமை பெற்றிட குறைந்தபட்சம் 11 ஆண்டுகள் தொடர்ந்து இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி, அவர்கள் 6 ஆண்டுகள் தங்கியிருந்தாலே போதுமானது என்றும் திருத்தம் செய்யப்பட்டது. இச்சட்ட முடிவை, இந்திய நாடாளுமன்றத்தின் பொறுப்புக் குழுவிற்கும் அனுப்பியுள்ளது.

ஆனால், இந்தியாவின் "நட்பு" நாடு என இந்திய அரசு தொடர்ந்து கூறிவரும் "இலங்கை" இந்த அண்டை நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்படாமல், கவனமாகத் தவிர்க்கப்பட்டது.

இலங்கையைத் தமது அண்டை நாடு என்று வரையறுக்காததன் மூலம், சிங்கள இனவெறி அரசின் இனப்படுகொலைகளுக்கு அஞ்சி தமிழ்நாட்டுக்குத் தஞ்சமாக வந்துள்ள தமிழீழ ஏதிலிகள் - அவர்களில் பெரும்பாலானோர் 'இந்துக்களாக" இருப்பினும்கூட, அவர்கள் இருபதாண்டுகளைக் கடந்து தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தாலும்கூட, அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க மறுக்கிறது இந்திய அரசு! இவர்களுக்கான பதிவுக் கட்டணமோ, 10,000 ரூபாய் என்றும் வரையறுத்துள்ளது.

பாக்கித்தான் - ஆப்கானித்தான் - வங்கதேசம் உள்ளிட்ட இந்தியாவின் "அண்டை" நாடுகளைச் சோந்த இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்கள், பவுத்தர்கள், ஜெயினர்கள், பார்சிகள், கிறித்துவர்கள் உள்ளிட்ட பல்வேறு மதத்தினரையும் இந்திய அரசு ஏதிலியராக ஏற்று, அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க முனைகிறது.

ஆனால், இந்திய அரசு வரையறுத்துள்ள "மதச்சிறு பான்மையினர்" என்ற வரையறுப்பின் படியேகூட, இலங்கைத் தீவின் தமிழர்கள் - சிறுபான்மை இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்ற நிலையிலும், அவர்கள் "தமிழர்கள்" என்பதால், அவர்கள் இந்துக் களாக இருந்தாலும்கூட ஆரியர்களுக்குக் கீழ்ப்படிந்த அடிமைகள்தான் என்பதை ஆரிய இந்திய அரசு தன் நடவடிக்கையால் உணர்த்தியிருக்கிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு (21.11.2007), மறுவாழ்வுத் துறை சிறப்பு ஆணையருக்கு கடிதம் எழுதிய, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், இந்திய அரசின் அறிவுத்தல்கள் இருப்பதால் தமிழீழத் தமிழர் கள் இந்தியக் குடியுரிமை பெற விண்ணப்பித்தால் அவற்றைப் பெற வேண்டாமென தெரிவித்தார் (**காண்க:** *தி இந்து, 25.08.2016*). ஆனால், பலமுறை போர் புரிந்துள்ள பாக்கித்தான் ஏதிலியரைக்கூட இந்திய அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளது! தமிழர்களை ஏற்பதற்கு மட்டும் இந்தியாவிற்குத் தயக்கம்!

பாக்கித்தான் - ஆப்கானித்தான் - வங்கதேச ஏதிலியர்களுக்கு இந்திய அரசு சிறப்பு சலுகைகளை வழங்கிக் கொண்டிருந்த அதே வேளையில், திருச்சி தமிழீழ ஏதிலியர் "சிறப்பு முகாமிலிருந்து" தங்களை விடுதலை செய்யக் கோரி தமிழீழ ஏதிலியர்கள் 11 பேர் சாகும் வரை உண்ணாப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த செய்தியும் ஊடகங்களில் வெளியானது.

அப்போது, தமிழ்நாட்டில் தமிழீழ ஏதிலியர் முகாமில் ஆய்வு நடத்திய பா.ச.க அமைச்சர் பொன். இராதாகிருட்டிணன், தமிழீழ ஏதிலிகள் இலங்கைக்குத் திரும்புவதே நல்லது என செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பாக்கித்தானிலிருந்தும், வங்கதேசத் திலிருந்தும் இந்தியாவிற்குத் தஞ்சம் கேட்டு வரும் "இந்து" ஏதிலியரையும் அவரவர் நாட்டுக்கேத் திரும்பிச் செல்லுங்கள் என பொன். இராதாகிருட்டிணன் கூறுவாரா? மாட்டார்! தமிழர்கள் என்றாலே இந்தியத் தை அண்டிப்பிழைக்கும் விலங்குகளாகக் கருதும் இந்துத்துவ மனநிலையையே பொன்னார் அவர்கள் வெளிப்படுத்துகிறார்!

கடந்த 1983ஆம் ஆண்டு, சிங்கள பவுத்த இனவெறி அரசால் - இலங்கைத்தீவின் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக இனப்படுகொலை செய்யப்பட்டப் பிறகு தமிழ்நாட்டிற்கு, தமிழீழ மக்கள் ஏதிலிகளாக வரத் தொடங்கினர். கடந்த 2016 மார்ச் வரை, அவ்வாறு தமிழ்நாட்டிற்கு வந்த தமிழீழ ஏதிலியரின் எண்ணிக்கை 1,01,027 என்கிறது இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம்!

சற்றொப்ப 1 இலட்சம் தமிழர்கள் ஏதிலியராய் உள்ள நிலையில், அவர்களுக்கு குடியுரிமை மட்டுமின்றி, சக இந்தியக் குடிமக்களுக்குரிய மனித உரிமை களைக்கூட அளிக்க மறுத்து வருகிறது இந்திய அரசு! இருபத்தி நான்கு மணி நேரமும் இந்திய அரசின் உளவுத்துறை கண்காணிப்பு, வெளியே வேலைக்குச் செல்ல அனுமதி மறுப்பு, சொந்தமாகத் தொழில் தொடங்கத் தடை, கல்வி கற்ற பின் வேலை வாய்ப்பு மறுப்பு என தமிழீழ ஏதிலியர்கள், தமிழ்நாட்டில் அனுபவிக்கும் கொடுமைகள் ஏராளமானவை. இன்னொருபுறத்தில், "சிறப்பு முகாம்" என்ற பெயரில் தமிழீழ ஏதிலியர்களில் சிலரைப் பிடித்து, தடுப்புக்காவலில் வைக்கும் கொடுமையும் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழீழ ஏதிலியரைப் போலவே, சீன அரசின் இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள்தான் திபெத்திய ஏதிலியர்கள். சற்றொப்ப 1 இலட்சம் திபெத்திய ஏதிலியர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு (20.10.2014), இந்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் சியாம் சுந்தர், இந்தியாவில் திபெத் ஏதிலியர்கள் குடியமர்த்தப் பட்டுள்ள பல்வேறு மாநில அரசுகளின் தலைமைச் செயலாளருக்கு திபெத்திய ஏதிலியர்களுக்கு அளிக்கப் பட வேண்டிய சலுகைகள் குறித்தும், இந்திய அரசு அதற்கென வகுத்திருக்கும் "திபெத்திய மறுவாழ்வுக் கொள்கை - 2014" குறித்தும் கடிதம் எழுதினார். அதன்படி, திபெத்திய ஏதிலியர்களுக்கு இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்கள் பொருந் தும்படி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதன்படி, நூறு நாள் வேலைத்திட்டம் உட்பட இந்திய அரசின் திட்டங்களிலும், மாநில அரசின் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட திட்டங்களிலும் திபெத்திய ஏதிலியர்கள், சக இந்தியக் குடிமக்களைப் போல் இணைக்கப்படலாம். அவர்கள், தனியே கடை நடத்த வும், சுயதொழில் செய்யவும், மாநில அரசின் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறவும், தனியே கூட்டுறவு சங்கம் நடத்தவும் - அரசே ஊக்குவிக்கலாம் என்றெல்லாம் அக்கொள்கை அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், மாநில அரசின் வேலைவாய்ப்புகளைக்கூட திபெத்திய ஏதிலியருக்கு அளிக்கலாம் என்பது அந்த கொள்கை அறிவிப்புகளில் ஒன்று!

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம், கடந்த 07.03.2016 அன்று திபெத்திய ஏதிலியர்களுக்கு இந்திய அரசு அளித்து வரும் சலுகைகள் குறித்து நாம் எழுப்பிய வினாவுக்கு விடையளித்த இந்திய அரசு (**கடித எண்**: MHOME/R/2015/82259), திபெத்திய ஏதிலியர் முகாம்கள் மற்றும் அலுவலகங்களைப் பராமரித்து வரும், தலாய்லாமாவின் திபெத் நடுவண் நிவாரணக் குழுவுக்கு (Central Tibetan Relief Committee - CTRC) என்ற அமைப்புக்கு, சற்றொப்ப 40 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுதாக தெரிவித்தது.

இந்திய அரசின் குடியுரிமைச் சட்டம் 1955இன்படி, திபெத்திய ஏதிலியரும் - தமிழீழ ஏதிலியரும் "சட்ட விரோதக் குடியேறிகள்"தான். ஆனால், திபெத்திய ஏதிலியர்களுக்கும், இன்னும் பிற நாடுகளைச் சேர்ந்த ஏதிலியருக்கும் இந்திய அரசு பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழீழ ஏதிலியர் களை மட்டும் எந்தச் சலுகைகளும் அளிக்கப்படாத குற்றவாளிகளைப் போல் நடத்துவது என்ன ஞாயம்? இது பச்சையான இனப்பாகுபாடில்லையா?

இந்திராகாந்தியைக் கொன்றுவிட்ட காரணத்தால், சீக்கிய இனமே குற்றவாளியாக சித்தரிக்கப்பட்டு, அவ்வினத்தின் ஏதிலியர்களுக்கு இந்திய அரசு உரிமை மறுப்புகளைச் செய்யவில்லை. பாக்கித்தானிலிருந்து வரும் சீக்கிய ஏதிலிகளை, இந்தியக் குடியுரிமை அளித்து ஏற்கிறோம் என்கிறது, இந்திய அரசின் புதிய சட்ட திருத்தம்! ஆனால், இராசீவ் காந்திக் கொலையைக் காரணமாகக் காட்டி, ஒட்டுமொத்தத் தமிழீழத் தமிழர்கள் அனைவரையும் குற்றவாளிகளாக இந்திய அரசு சித்தரிப்பதற்குக் காரணம், இனப்பகை அல் லாமல் வேறென்ன?

திபெத்திய ஏதிலியர்களை பராமரிக்கும் அமைப் பிற்கு நிதி வழங்கும் இந்திய அரசு, இன்னொருபுறம் தமிழீழ ஏதிலியரின் முகாம்களுக்குள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக்கூட அனுமதிக்க மறுப்பதை, "இனப்பாகுபாடு" என்று சொல்லாமல், வேறெப்படி சொல்ல முடியும்?

தமிழீழ ஏதிலியரைத் தவிர்த்து பிற நாட்டு ஏதிலியர்கள் குடியமர்த்தப்பட்ட முகாம்களில் இந்திய அரசின் அனுமதியோடு, தொண்டு நிறுவனங்கள் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், 1992ஆம் ஆண்டு இந்திய அரசு அதற்குப் போட்டத் தடை இன்றும் நீடிக்கிறது. அந்தத் தடை காரணமாக, இன்றுவரை தமிழீழ ஏதிலியர் முகாமிற்குள் சென்று, தொண்டு நிறுவனங்கள் பணிபுரிய முடியாது. ஐ.நா. ஏதிலியர் ஆணையர்கூட இம்முகாம்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஏன் இந்தப் பாகுபாடு?

சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழையும் வெளி நாட்டவர்களை முறைப்படி விசாரித்து, அவர்கள் இங்கிருந்தபடியே அவர்களது சொந்த நாட்டின் கடவுச்சீட்டைப் பெறவோ அல்லது ஐ.நா.வுக்கான ஏதிலியர் ஆணையத்திடம் பதிவு செய்யவோ இந்திய அரசு உதவி செய்ய வேண்டும் என அசாம் - கவுகாத்தி உயர் நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நீதிமன்றங்கள் தீர்ப்புரைத்துள்ளன. (**வழக்குகள்** : Mr.Bogyi *Versus* Union of India Civil Rule No. 1847/89, Civil Rule No. 516 of 1991, Mr.U.Myat Kyaw and others *Versus* State of Manipur and others). இதன்படி, அசாம், அருணாச் சலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் வங்கதேச ஏதிலியர்கள் பலர் இந்தியக் குடியுரிமையும், ஏதிலியர் ஆணையப் பதிவும் பெற்றுள்ளனர்.

ஆனால், ஆரிய இந்தியாவின் மனுதரும நீதியின்படி, நீதிமன்றத் தீர்ப்புகள் எதுவுமே தமிழர்களுக்கு செல்லு படியாவதில்லை! எனவேதான், தமிழீழ ஏதிலியர்கள் தொடர்ந்து குற்றவாளிகளாக நடத்தப்பட்டு வருகின்றனர்.

ஏதிலியர் குறித்து இந்திய அரசிடம் தெளிவான தேசியக் கொள்கை இல்லாத நிலையில், ஏதிலியர் தொடர்பான அனைத்துலகப் பொதுப் புரிதல் ஒப்பந்தம் - 1951 (International Convention on the Status of Refugees) மற்றும், 1967 ஆம் ஆண்டின் ஏதிலிகள் நிலை குறித்த செயல்முறை (Protocol on the Status of Refugees - 1967) ஆகியவற்றில், இந்திய அரசு கையெழுத்திடாத நிலையில்தான் தமிழீழ ஏதிலியருக்கு

இந்த இனப்பாகுபாடு நடப்பதாகவும் நாம் கருதிவிட முடியாது!

இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடாவிட்டாலும் ஏதிலியரை மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டும் என இந்தியாவின் பல்வேறு உயர் நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அந்தத் தீர்ப்புகளின் அடிப்படையில்தான், பாலத்தீனம், சோமாலியா, ஆப்கானித்தான் நாட்டு ஏதிலியருக்கு, ஐ.நா.வின் ஏதிலிகள் ஆணையத்தின் மூலம் மானியங்கள் வழங்கி, இந்திய அரசு உதவுகின்றது. திபெத், வங்கதேசம் உள்ளிட்ட பல நாடுகளின் ஏதிலியருக்கு சிறப்புப் பள்ளி - கல்லூரி, தொழில் மானியம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை இந்திய அரசே செய்து கொடுக்கிறது.

ஆனால், இவையெல்லாம் தமிழர்களுக்கு மட்டும் பொருந்தாது எனில், இதை "இனப்பாகுபாடு" என்று சொல்லாமல் வேறெப்படி சொல்வது?

தமிழீழ ஏதிலியர்கள் மட்டுமின்றி, இந்திய அரசால் முற்றிலும் கைவிடப்பட்ட மலையகத் தமிழர்களின் நிலை இன்னமும் மோசமானது. இன்றைக்கும் பல்லாயிரக்கணக்கான மலையகத் தமிழர்கள், நாடற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் சோக வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள்!

இலங்கைத் தீவின் தெற்குப்பகுதி தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிவதற்காக வெள்ளையர்களால் கொண்டு செல்லப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு, சிங்களருக்கு இணையான அனைத்து உரிமைகளும் வழங்கப்படும் என்றே வெள்ளை ஏகாதிபத்திய அரசால் உறுதி கூறப்பட்டது. ஆனால், 1954ஆம் ஆண்டு இலங்கை வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலையானப் பிறகு, அவர்கள் நாட்டற்றவர்களாக்கப் பட்டனர். பல ஒப்பந்தங்கள் மேற்கொண்டும்கூட, அவர்களின் இழிநிலை தொடர்கிறது. "தமிழர்கள்" என்பதாலேயே, இந்திய அரசு அவர்களைக் கண்டு கொள்ள மறுக்கிறது.

ஆரிய இந்திய அரசின் தமிழர்களுக்கு எதிரான இனப்பாகுபாடு, எல்லாத் துறைகளிலும் எதிரொலித்துக் கொண்டுள்ளது. தமிழீழ ஏதிலியர் சிக்கலில், அது வெளிப்படையாகவே தெரிகிறது!

தமிழர்களே, நாம் என்ன செய்யப் போகிறோம்? ■

# ஆவடியில் முப்பெரும் விழா



தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு – மொழிவழி மாநிலமாகத் "தமிழ்நாடு" உருவானதன் 60ஆம் ஆண்டு – புரட்சிப்பாவலர் பாரதிதாசன் 125ஆவது பிறந்த நாள் ஆகியவற்றை இணைத்து, ஆவடியில் 25.12.2016 ஞாயிறு அன்று, "தமிழ் இலக்கியக் குழு" சார்பில் "முப்பெரும் விழா" கொண்டாடப்பட்டது.

ஆவடி பாரதிதாசன் திருமண அரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, தமிழ் இலக்கியக் குழு நிறுவனர் திருமதி. இல. விசயகுமாரி தலைமை தாங்கினார்.

நிகழ்வின் தொடக்கத்தில், மாணாக்கர் மற்றும் இளையோர் அரங்கில், செல்வன் இரா. விசுவா அவர்களின் "தமிழர் ஒகக்கலை" நிகழ்வும், தமிழ்நாடு சிலம்பம் தற்காப்புக் கலைக் குழுவினரின் "தமிழர் வீரக்கலை" நிகழ்வும், "கவியருவி" சமாரியா அவர்களின் தித்திக்கும் செந்தேன் மெல்லிசைக் குழுவினரின் ஆடல் நிகழ்வும், "எழுச்சிப் பாடகி" குடந்தை இரத்தினா அவர்களின் இன எழுச்சிப் பாடல்கள் நிகழ்வும் சிறப்புற நடைபெற்றன. முன்னதாக, திருவள்ளுவர், மறைமலை யடிகள், பாவேந்தர் பாரதிதாசன், சங்கரலிங்கனார், உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர்களின் படங்கள் திறக்கப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் நடைபெற்ற நிறைவரங்கில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன், கலை நிகழ்ச்சிகளை நடத்திய மாணவர் களுக்கு பரிசளித்துப் பாராட்டி சிறப்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வை தோழர் சு. ஆதிரை, இரா. பிரீத்தி ஆகி யோர் தொகுத்து வழங்கினர். திரு. து. தனலட்சுமி நன்றி கூறினார். நிகழ்வில், தமிழின உணர்வாளர்களும் பொது மக்களும் திரளாகப் பங்கேற்றனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் க. அருணபாரதி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ.நல். ஆறுமுகம், தென்சென்னை செயலாளர் தோழர் மு. கவியரசன், வட சென்னை செயலாளர் தோழர் செந்தில், தமிழக இளைஞர் முன்னணி செயலாளர் தோழர் வெற்றித்தமிழன் உள்ளிட்ட பேரியக்கத் தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

# செல்லாப் பணத்தாள் சூழ்ச்சித்திட்டம்

# தமிழ்த்தேசியர்களின் கடமை என்ன?

கி. வெங்கட்ராமன்




கடந்த நவம்பர் 8 அன்று, பா.ச.க. நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு, 500 மற்றும் 1000 ரூபாய்த்தாள்களைத் திரும்பப் பெறுவதாக அறிவித்த "பணமதிப்பு நீக்க" நடவடிக்கை, இந்தியத் துணைக் கண்ட மக்களை உலுக்கியெடுத்து வருகிறது.

தாங்கள் உழைத்துச் சேர்த்தப் பணத்தை வங்கி களிலிருந்து எடுக்க முடியாமல், அன்றாடச் செலவு களுக்குக்கூட பணம் எடுக்க முடியாமல் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும் கடும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர். தங்கள் வணிகத்தையும் தொழில்களையும் நடத்த முடியாமல் சிறுதொழில் முனைவோரும், சிறுவணிகர்களும் திணறுகின்றனர்.

கருப்புப் பணத்தையும், கள்ள ரூபாய் நோட்டு களையும் செயல்படாமல் முடக்குவதற்கே இந்த அறிவிப்பு என்று நரேந்திர மோடி காரணம் கூறினார். பாக்கித்தானிலிருந்து பயங்கரவாதிகள் எல்லை கடந்து கள்ள ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டு, இந்தியாவில் பயங்கரவாதச் செயல்களுக்கு அதனைப் பயன்படுத்திக் கொள் கிறார்கள் என்றும் கூறினார்.

மோடியின் இந்த அறிவிப்பு உண்மையில் கருப்புப் பணத்தை தடுப்பதற்கு உதவாது என்று அறிவிப்பு வெளியான நாளிலிருந்து தமிழ்த்தேசியப் பேரியக்கம் குரல் கொடுத்து வருகிறது.

தற்போது, இதை இந்திய அரசின் சேம நல வங்கியே மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மோடி அரசின் உண்மையான நோக்கம், மக்கள் சேமிப்புப் பணத்தை பெருமுதலாளிகளுக்கு எளிய கடனாக வழங்குவது தான்!

இதனைப் புரிந்து கொள்ள மோடி அரசின் ஆட்சிக் கோட்பாடுகளை அடிப்படை அளவிலாவது புரிந்து கொள்வது அவசியம்.

ஆரிய இந்துத்துவாவும், உலகமயப் பன்னாட்டு வேட்டையும் மோடி அரசுப் பயணிக்கும் இரட்டைத் தண்டவாளங்களாகும். பா.ச.க. அரசின் செயல்பாடு களை உற்று நோக்கினால் இந்த உண்மைப் புரியும்.

ஆரிய ஆட்சியாளர்களின் வழிகாட்டும் நூலாக இருந்தது சாணக்கியனின் "அர்த்த சாத்திரம்" ஆகும். இன்றைய இந்திய ஆட்சியாளர்களுக்கும் அது வழிகாட்டி வருகிறது.

"சாம, காம, பேத, தண்டம்" என்பதையே சாணக்கியன் அரசர்களின் ஆட்சி நடைமுறையாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

"சாம" என்றால் பரப்புரை. இதனை இன்னும் தெளிவாக "மந்திர யுத்தம்" என்றே சாணக்கியன் குறிப்பிடுகிறார். மக்கள் மனத்தைக் கிளர்ச்சியுறச் செய்து, அதன் ஊடாக தன் கருத்துகளை நிலைநிறுத்தி - அம்மக்களை தனக்குப் பின்னால் திரட்டிக் கொள்வது என்பதைத்தான் "மந்திர யுத்தம்" என அவர் குறிப் பிடுகிறார்.

"காம" என்றால் மக்களிடமோ எதிரியிடமோ ஆசையைத் தூண்டி அவர்களது பலவீனத்திற்கு இரை போடுவது. வெளிப்படையான கையூட்டிலிருந்து துதிபாடி குளிப்பாட்டுதல் வரை உள்ள உத்திகள் இதில் அடங்கும்.

"பேத" என்றால் மக்களிடையே இருக்கும் வேறு பட்டத் தன்மைகளை கூர் தீட்டிவிட்டு, மோதலை உண்டாக்குவது. மக்களை பலக் கூறுகளாகப் பிரித்து விடுவது என்பதாகும்.

"தண்டம்" என்பது வெளிப்படையான அரசு அடக்கு முறையைக் குறிக்கும்.

மோடி அரசு மேற்சொன்ன நான்கு உத்திகளையும் இணைத்துக் கடைபிடித்து வருவதைப் பார்க்க முடியும்.

நவீனத் தகவல் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி போலியான பெரிய பிம்பத்தை உருவாக்கித்தான், மோடி ஆட்சிக்கு வந்தார். அவரது வாயாடும் பேச்சுத் திறன் அதற்கு உதவி செய்கிறது. அரைகுறை உண்மைகளையும் முழுப் பொய்யையும் தேவையான வகையில் கலந்துத் திரித்து ஒரு பொய்மையை உண்மைபோல் சித்தரித்துக் காட்டும் உத்தியை மோடி அரசு தொடர்ந்து கடைபிடித்து வருவதைப் பார்க்க முடியும்.

இந்த உத்தியில் தனது தோல்விகளையே பெரிய வெற்றிகளைப் போல் மாற்றிச் சொல்லும் வித்தையை மோடி பரிவாரங்கள் அரங்கேற்றி வருகின்றன. இந்த நோக்கில் மக்களை எப்போதும் ஒரு பதட்ட நிலையிலேயே வைத்திருக்கும் உத்தியை மோடி கடைபிடித்து வருகிறார்.

ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகளாகியும் சொல்லிக் கொள்ளத்தக்க உருப்படியான சாதனை எதுவும் இல்லாத ஆட்சி, மோடியின் ஆட்சி! ஆனால், தனது சாணக்கிய உத்தியின் மூலம் ஏதோ செயல்பட்டுக் கொண்டிருப்பது போல படம்காட்டி வருகிறார். அதற்காகவே புதிய புதிய சிக்கல்களை உருவாக்கி, ஒரு பதட்ட சூழ்நிலையை ஏற்படுத்தி, தான் கேள்வி கேட்கும் இடத்திலும், பிற எதிர்க்கட்சிகளும் மக்கள் இயக்கங்களும் அது குறித்து பதில் கூறும் இடத்திலும் தொடர்ந்து வைத்திருக்கிறார்.

மாட்டிறைச்சி, வந்தே மாதரம், தேசப்பற்று, பாக்கித்தான் எதிர்ப்பு, துல்லியத் தாக்குதல், தூய்மை இந்தியா, மேக் இன் இந்தியா, பொதுக் குடிமைச் சட்டம் என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிவிப்பை முன்வைத்து அரசியல் களத்து விவாதத்தை முன் மொழியும் இடத்தில், தன்னை முன்னிறுத்திக் கொள்வது மட்டுமின்றி, தனது கருத்தை ஏற்காத பிறர் அனைவரும் "தேசபக்தி" சந்தேகப் பட்டியலில் வைக்கப் பட வேண்டியவர்கள் என்ற ஒருவகை பதட்டத்தை நிரந்தரமாக வைத்திருக்கிறார்.

மோடி பயணிக்கும் அடுத்த தண்டவாளம் - தாராளமயம் என்ற கட்டுத்தளையற்ற வேட்டைப் பொருளியல்!

இக்கோட்பாட்டின் தந்தை எனப் போற்றப் பட்டவர் மில்டன் ப்ரீட்மன் (Milton Freidman) ஆவார். நோபல் பரிசு பெற்ற பொருளியல் வல்லுநரான ப்ரீட்மன், பிரிட்டனின் மார்கரெட் தாட்சருக்கும் அமெரிக்கா வின் ஜார்ஜ் புஷ்ஷுக்கும், சிலியின் சர்வாதிகாரி பினோச்சேவுக்கும் அறிவுரையாளராகத் திகழ்ந்தவர்.

நிகரமை சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கு உலக மக்களிடம் பரவியிருந்த சூழலில், முதலாளிய நாடுகளில்கூட அரசுத்துறையின் கட்டுப்பாடுகளும் மக்களுக்கான நலத்திட்டங்களும் நிலை பெற வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதனை முறித்து, கட்டுத்தளையற்ற முதலாளிய வேட்டைப் பொருளியலை "தாராளமயம்" என்ற பெயரில் செயல்படுத்துவதற்கு, 'அதிர்ச்சிக் கோட்பாடு' (Shock Doctrine) என்பதை ப்ரீட்மென் முன்வைத்தார். கனடாவின் கூர்மையான அரசியல் திறனாய்வாளரான நவோமி க்ளின் அம்மையார் (Noami Klein) தனது "அதிர்ச்சிக் கோட்பாடு : பேரழிவு முதலாளியத்தின் எழுச்சி" (Shock Doctrine: The Rise of Disaster Capitalism) என்ற நூலில், ப்ரீட்மெனின் கோட்பாட்டை தோலுரித்துக் காட்டுகிறார்.

திட்டமிட்ட பொய்க் குற்றச்சாட்டை சதாம் உசேன் ஆட்சியின் மீது சுமத்தி - உலகையே போர்ப் பதட்டத்தில் தள்ளிவிட்டது, அல்கொய்தாவின் நியூயார்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல்,

அமெரிக்காவைத் தாக்கியக் கத்ரீனாப் புயல், இலங்கை உள்ளிட்ட இந்தியத் துணைக் கண்டத்தைத் தாக்கிய சுனாமி ஆழிப்பேரலை போன்ற அதிர்ச்சி நிகழ்வுகளின் வழியாக, தாராளமய முதலாளிய வேட்டை எவ்வாறு கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை நவோமி க்ளீன் துல்லியமாக விளக்குகிறார்.

மோடி அரசுக்கு மில்டன் ப்ரீட்மென்னின் அதிர்ச்சிக் கோட்பாடும் பயன்படுகிறது. முன்னர் குறிப்பிட்ட சாணக்கியக் கோட்பாடும் பயன்படுகிறது. இந்த இரண்டின் கலவைதான் மோடி அரசின் ஆட்சி முறை ஆகும்!

இந்தப் பின்னணியில், பண மதிப்பு நீக்க நடவடிக்கையை ஆய்ந்து பார்த்தால் மோடி அரசின் உண்மை நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

மோடி இந்த நடவடிக்கையை அறிவித்த நவம்பர் 8 அன்று, 8.58 இலட்சம் கோடி ரூபாய்க்கு 500 ரூபாய் தாள்களும், 6.86 இலட்சம் கோடி ரூபாய்க்கு 1000 ரூபாய் தாள்களும் என மொத்ததாக சற்றொப்ப 15.44 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு 500 மற்றும் 1000 ரூபாய்த்தாள்கள், இந்தியாவில் புழக்கத்திலிருந்ததாக இந்திய அரசு தெரிவித்தது.

**“ மோடி - அருண் செட்லி - உர்ஜித் பட்டேல் - சதிக் கூட்டம், அம்பானி - அதானி - டாட்டாவின் வாராக் கடன்களை வசூலிக்காமலேயே வங்கிகளை வலுப்படுத்தி, அதன்வழியாக மேலும் மேலும் இம்முதலாளிகளுக்கு கடன் தொகை கிடைப்பதற்கான வழியைக் கண்டுபிடித்தார்கள். அதுதான், இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கை!**



வெறும் 18 நாட்களிலேயே மக்கள் 8 இலட்சம் கோடி ரூபாயை வங்கியில் செலுத்தி விட்டதை கணக்கிட்டால், திசம்பர் 31 வரையிலான மீதமுள்ள நாட்களில், சற்றொப்ப 3 இலட்சம் கோடி ரூபாயும் வங்கிகளில் வந்து விடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆக, 19.5 இலட்சம் கோடி ரூபாயில் 15.5 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கானத் தொகை கணக்கில் வந்து விட்டது. இதே கால கட்டத்தில் நல நிதியில் (Mutual Fund) 4 இலட்சம் கோடி ரூபாய் சேர்ந்துள்ளது. இந்த செய்தி, 500 மற்றும் 1000 ரூபாய்த் தாள்களில் மிகப்பெரிய அளவில் கருப்புப் பணம் பதுக்கப் பட்டிருக்கிறது என்ற மோடியின் பொய்யை அப் பட்டமாக அம்பலப்படுத்து கின்றது.

ஏனெனில், கருப்புப் பணப் புள்ளிகள் தங்கள் சட்ட விரோதமான பணத்தைப் புழங்கவிடும் முறையே மனை வணிகம், தங்கப் பதுக்கல், ஊக வணிகம், பங்குச்சந்தை, பாரதிய சனதா - காங்கிரசு போன்ற தேர்தல் கட்சிகள் ஆகியவைதான்!

கருப்புப் பணப் பேர்வழிகளின் பணத்தில் புழங்கும் முதன்மைத் தேர்தல் கட்சியே பாரதிய சனதாதான். அதன் தலைமை அமைச்சர் கருப்புப் பணத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறார் என்று நம்பிய அப்பாவிகளும் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்து வருகிறார்கள்.

இந்த மொத்தத் தொகையில், சற்றொப்ப 8.45 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கான 500 மற்றும் 1,000 ரூபாய்த் தாள்கள், பணமதிப்பு நீக்க அறிவிப்பிற்குப் பிறகான நவம்பர் 10 முதல் நவம்பர் 27 வரையிலான நாட்களில் மக்களால் வங்கிகளில் நேரடியாக செலுத்தப்பட்டு விட்டதாக, இந்திய அரசின் சேம நல வங்கி 28.11.2016 அன்று தெரிவித்தது. இந்திய சேமநல வங்கி தனது கையிருப்பாக 4.06 இலட்சம் கோடியை வைத்திருப்பதாகவும் 08.11.2016 அன்று தெரிவித்து விட்டது.

ஆக, இவற்றை சேர்த்துக் கணக்கிட்டால் சற்றொப்ப 12.50 இலட்சம் ரூபாய் கணக்கில் வந்துவிட்டது.

ஆரிய சாணக்கியனின் இன்னொரு பொன்மொழி உண்டு. “அரசன் தனது உண்மை நோக்கத்தை வெளிப்படுத்தக்கூடாது. நேராக வளரும் மரமே முதலில் வெட்டப்படுவது போல, நேர்மையான ஆட்சி முதலில் அழிந்து போகும்!“ என்பதே அது! இதுதான் மோடிக்கும் வழிகாட்டுகிறது.

மோடியின் உண்மையான நோக்கம், கருப்புப் பண ஒழிப்பு அல்ல! கருப்புப் பணத்தின் செயல்வடிவம் என்ன என்பது வேறு யாரையும்விட மோடிக்கு

நன்றாகவே தெரியும். ஏதோ நல்ல நோக்கத்தில், கருப்புப் பண ஒழிப்பு என்று இறங்கி, திசை தெரியாமல் தவிக்கும் அப்பாவி அல்லர் மோடி!

புழக்கத்திலுள்ள மொத்தப் பணத்தாள்களில், 86 விழுக் காடு மதிப்புடைய ரூபாய் 500 - 1,000 தாள்களை திடீரென செல்லாது என அறிவித்தால், மக்கள் எவ்வளவு திண்டாடு வார்கள் - பொருளியலில் என்ன அதிர்ச்சி ஏற்படும் என்று உணராதவரும் அல்லர்.

இந்திய சேம வங்கி அதிகா ரிகள், "மக்கள் துன்பப் படு வார்கள் என்பது எங்களுக்கு முன்பே தெரியும்" என்று கூறுவதே இதற்குச் சான்று.

சாணக்கியன் கூறியது போல, தனது வலுவான பரப்புரையைக் கொண்டு கருப்புப் பண ஒழிப்புக்கான நடவடிக்கை இது என தனது பொய்யை உண்மையென முதலில் நம்ப வைத்தார் மோடி. இவ்வாறு மறைத்து வைக்கப்பட்ட தனது உண்மையான நடவடிக்கைக்கு கணிசமான மக்களின் ஏற்பை உருவாக்கினார். "உருவாக்கப்பட்ட ஏற்பு" (Manufactured Consent) என்று இதனை சமூக உளவியலாளர்கள் வரையறுக் கிறார்கள்.

ஒட்டுமொத்த மக்களும் தங்களது இயல்பு வாழ்க் கையை திடீரென இழந்து, பதட்டத்தோடு வங்கிகளில் குவிந்தார்கள். தானியங்கி பண எந்திரங்களின் முன் னால் நீண்ட வரிசையில் நின்றார்கள். கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக, எங்கு நோக்கினும் இதன் மீதான விவாதங்கள் - அலைக்கழிப்புகள் என்ற அதிர்ச்சி மக்களுக்கு அளிக்கப்பட்டது.

சாணக்கியத்தின் பொய்ப் பரப்புரை, மில்டன் ப்ரீட்மென்னின் அதிர்ச்சி வைத்தியம் இரண்டும் இணைந்து திசை தெரியாத மனநிலையில் மக்களை கொண்டு வந்து நிறுத்திய சூழலில், மறைக்கப்பட்ட தனது உண்மையான நோக்கத்தை மோடி வெளிப் படுத்தினார்.

"பணத்தாளில்லாப் பரிமாற்றம்" (Cashless Transaction), "பணத்தாளில்லாப் பொருளியல்" (Cashless economy) என்பதே அது!

பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில், "பணத் தாளில்லாப் பரிமாற்றம்" ஊக்குவிக்கவே இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டதாக வெளிப்படையாகவே இந்திய அரசு தெரிவித்துவிட்டது.

"பணத்தாளில்லாப் பரிமாற்றம்" என்ற மோடி அரசின் அறிவிப்பு, பெரும் சூழ்ச்சிகளைக் கொண்ட திட்டமாகும்.

வட அமெரிக்காவிலும், மேற்குலகிலும் 2008இல் நிகழ்ந்ததுபோல், இந்திய வங்கிகள் ஓட்டாண்டியாகும் நிலைக்கு மிகப்பெரிய நிதி நெருக்கடி நெருங்கிக் கொண்டிருந்தது. தாங்கள் தூக்கி நிறுத்திய நரேந்திர மோடி ஆட்சி, தங்களது அடியாள் ஆட்சி என்ற துணிச்சலில் பெருமுதலாளிகள் பெருமளவு மோசடி களில் இறங்கினார்கள்.

ஏற்கெனவே, தயங்கித் தயங்கிக் கடன் கட்டிக் கொண்டிருந்த இந்தியப் பெருமுதலாளிகள், தங்களது கடன்கள் வாராக் கடன்களாக தள்ளுபடி ஆகும் என துணிச்சல் பெற்றார்கள்.

இந்திய அரசு வங்கிகளின் வாராக் கடன்கள் கடந்த இரண்டாண்டுகளில் 40 விழுக்காடு உயர்ந்து, 2 இலட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியது. இதில், இந்திய ஸ்டேட் வங்கியின் வாராக் கடன் மட்டுமே 1 இலட்சத்து 5 ஆயிரம் கோடி ரூபாயாகும். மேற்சொன்ன 2 இலட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயில், 1 இலட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் "தள்ளுபடி செய்யப்பட்ட கடன்" என்று கடந்த மாதம் இந்திய நிதியமைச்சகம் அறிவித்தது. அரசின் இந்த முடிவை கேள்வி கேட்காத வகையில், இதற்கான நிதி நிர்வாகக் கட்டமைப்பை மோடியும் ஏற்படுத்தித் தந்தார்.

இதற்கு முன்னர் இந்திய சேம வங்கியின் ஆளுநராக இருந்த இரகுராம்ராசன் வாராக்கடன் பட்டியலி லிருந்த முதல் பத்து பெரும்புள்ளிகளின் கடனைக் கட்டுமாறு, அப்பெரும் புள்ளிகளுக்கு நெருக்குதல் கொடுத்தார்.

இந்தப் பெரும் புள்ளிகள்: 1,80,000 கோடி ரூபாய் தவணை தவறியக் கடன் வைத்திருந்த முகேஷ் அம் பானி, 1,24,000 கோடி வைத்திருந்த அனில் அம்பானி, 1,00,000 கோடி வைத்திருந்த எஸ்.ஆர். குழுமத்தின் ருய்யா சகோதரர்கள், 96,000 கோடி நிலுவை வைத்திருந்த அதானி, 76,000 கோடி வைத்திருந்த ஜேபி. குழுமம், 70,000 கோடி நிலுவை வைத்திருந்த டாடா, 47,000 கோடி நிலுவை வைத்திருந்த முதன்மை மின்சார நிறுவனமான ஜி.எம்.ஆர். குழுமம், 45,000 கோடி நிலுவை வைத்திருந்த வீடியோகான் நிறுவனம் ஆகியோர் ஆவர்.

இப்பெருமுதலாளிகளின் நெருக்கமான ஒட் டுண்ணிக் கூட்டாளி நரேந்திர மோடி! எனவே, பலவிதமான அவதூறுகளை சுப்பிரமணியம் சுவாமி வழியாகப் பரப்பி இரகுராம்ராசனை சேம வங்கியின் ஆளுநர் பதவியில் நீடிக்காமல் பார்த்துக் கொண்டார். இந்திய சேம வங்கியின் புதிய ஆளுநராக உர்ஜித் பட்டேல் நியமிக்கப்பட்டார்.

இந்த உர்ஜித் பட்டேல், அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். நரேந்திர மோடி குசராத் முதலமைச்சராக இருந்த போது, அம்மாநில அரசு நிறுவனமான குசராத் பெட்ரோலியம் குழுமத்தின் நிர்வாக இயக்குநராக

செயல்பட்டவர். அவருடைய உதவியோடு நரேந்திர மோடி, கிருஷ்ணா கோதாவரி பெட்ரோலிய எடுப்புத் திட்டத்தில் பல்லாயிரம் கோடி கொள்ளையடித்தார்.

இக்குழுமம் தோண்டும் இடத்தில் இலாபகரமான அளவு பெட்ரோலியம் கிடைக்காது என அந்த நிறுவனத்தின் அறிக்கையே வெளியானப் பிறகும், தொடர்ந்து பொய்க் கணக்கைக் காட்டி இந்திய ஸ்டேட் வங்கியிலிருந்து 22,000 கோடிக்கு மேல் கடன் பெற்று, அதில் அம்பானி – அதானி குழுமங்களுக்கு, எதுவும் நடைபெறாமலே 1,500 கோடி ரூபாய் இலாபம் கிடைக்க வழி ஏற்படுத்தி, அதற்கு கையூட்டுத் தொகையாகவும் பல நூறு கோடி ரூபாய் பெற்றவர் மோடி! இந்த மோசடிகளுக்கு துணை நின்ற உர்ஜித் பட்டேலை இந்திய சேம வங்கியின் ஆளுநராக மோடி அரசு நியமித்தது, பணமதிப்பு செல்லாது என்று அறிவிக்கும் திட்டத்திற்கான முன்னோட்டத் தயாரிப்பாகும் இந்த நியமனம்!

மோடி – அருண் செட்லி – உர்ஜித் பட்டேல் சதிக் கூட்டம், அம்பானி – அதானி – டாட்டாவின் வாராக் கடன்களை வசூலிக்காமலேயே வங்கிகளை வலுப் படுத்தி, அதன்வழியாக மேலும் மேலும் இம்முதலாளி களுக்கு கடன் தொகை கிடைப்பதற்கான வழியைக் கண்டுபிடித்தார்கள். அதுதான், இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கை!

இன்றுவரை இந்தியத் துணைக் கண்டத்தின் பொருளியல் நடவடிக்கைகளில் மிகப் பெரும்பாலா னவை சிறுதொழில்களிலும், சிறுவணிகத்திலும் நடந்து வருபவை ஆகும். இதனால், இந்தியப் பொருளியலில் புழங்கும் தொகையில் ஏறத்தாழ பாதி அளவு வங்கிகளுக்கு வெளியே நடந்து வருகிறது. ரொக்கப் பணப் பரிமாற்றமாக நடைபெற்று வருகிறது.

இவை எளிய மக்களின் பணமாகும். ஆனால், இதனை "கருப்புப் பணம்" என முத்திரை குத்தி, பணத்தாள் வைத்திருப்போர் எல்லாம் "இந்தியத்தேச விரோதிகள்" என்ற படிமத்தை பரப்புரையின் மூலம் மோடி அரசு ஏற்படுத்தியது. அவை செல்லாது என்று அறிவித்தபோது, திக்குமுக்காடிய மக்கள் அனைவ ரையும் வங்கிப் பரிமாற்றத்திற்குள் விரட்டியது.

பல இலட்சம் கோடி ரூபாய்த் தொகை வங்கி இருப்பாக சேரத் தொடங்கியவுடனேயே, வங்கியின் வட்டி விகிதம் குறைக்கப்பட்டுவிட்டது. இனி, மேலும் குறைந்த வட்டியில் பெருமுதலாளிகளுக்கு கடன் தொகைக் கிடைக்க பெரும் நிதியம் குவிக்கப் பட்டுவிட்டது! இதுதான் மோடியின் உண்மையான திட்டம்! இந்த நோக்கில்தான், இந்திய சேம வங்கியின் ஆளுநராக உர்ஜித் பட்டேலும் நியமிக்கப்பட்டார்.

100 ரூபாய் பணத்தாளை, ஆயிரம் முறை பரிமாற்றி னாலும் அதன் மதிப்பு 100 ரூபாயே ஆகும். ஆனால், மின்னணு வழியில் 100 ரூபாயைப் பரிமாறிக் கொள்ளும் போது, அதற்கு இடைத்தரகராகச் செயல்படும் ஜியோ மணி (Jio Money), பே.டி.எம். (PayTm) போன்ற நிறுவனங்களில் அதில் ஒரு பகுதியை "பரிமாற்றச் சேவைத் தொகை" (Transaction charges) என்ற பெயரில் எடுத்துக் கொள்ளும்.

அவ்வாறு, 100 ரூபாய் பணத்தாள் மின்னணு வழியாக பரிமாறப்படும் போது, ஒவ்வொரு முறைக்கும் 0.75 விழுக்காடு எனில், 10 முறை பரிமாற்றம் நிகழ்ந்தால் ரூ. 7.75 அளவு கரைந்துவிடும். 100 ரூபாயின் மதிப்பும், 92.25 ரூபாயாகக் குறைந்துவிடும்.

இப்போது வங்கிகளில் பணம் போடுவதோ, எடுப்பதோ, கடன் பெறுவதோ, தீர்ப்பதோ – எந்த ஒரு வாடிக்கையாளர் சேவைக்கும் சராசரியாக ரூ. 32 செலவாவதாக சேம வங்கி அறிவிக்கிறது. ஆனால் மின்னணு பரிமாற்றம் வழியாக இது நடக்கும்போது இந்தச் செலவு ரூ. 11 தான் ஆகிறது. ஆனால் சேவைக் கட்டணம் மட்டும் அதிகரிக்கிறது.

அம்பானியின் ஜியோ மணி நிறுவனத்தோடு இந்திய ஸ்டேட் வங்கி, நவம்பர் 8 அறிவிப்புக்கு மூன்று வாரங் களுக்கு முன்னால் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. ஸ்டேட் வங்கியோடு மின்னணுப் பரிமாற்றம் செய் வதற்கு, இடைத்தரகு நிறுவனமாக அம்பானியின் ஜியோ மணி இந்த ஒப்பந்தத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது.

இன்னொரு இடைத்தரகு நிறுவனமான பேடி.எம். (PayTm) முதலாளி விஜய் சேகர் சர்மா, மோடிக்கு நெருக்கமானவர். அந்தத் துணிச்சலில்தான் பேடி.எம். நிறுவன விளம்பரங்களில் மோடி பயன்படுத்தப் பட்டார். மோடியின் அனுமதியில்லாமல் அவர் படத்தை பயன்படுத்தியதற்காக, பே.டி.எம். நிறுவனத் திற்கு விதிக்கப்பட்ட தண்டத் தொகை என்ன தெரியுமா? வெறும் 500 ரூபாய் மட்டுமே!

"பணமில்லாப் பரிமாற்றம்" தொடங்கியப் பிறகு, இந்த 2016 நவம்பரில் மட்டும், பேடி.எம். நிறுவனத்தின் தொழில் 40 மடங்கு வளர்ந்திருப்பதாக விஜய் சேகர் சர்மாவே மார்தட்டுகிறார்.

சிறு, குறு வணிகர்கள் கையிலிருந்த உள்ளூர் வணிகம் இருக்கும் இடத்தை இணைய வழி வணிகம் (ஆன்லைன் வணிகம்) பெருமளவுக் கைப்பற்றிக் கொள்ளும்.

உள்ளூர் அளவில் செயல்படும் சிறு வட்டி வணிகர்கள் கையிலிருந்து நிதிச் சந்தையும் பெரும் நிதி நிறுவனங்களிடம் சென்றுவிடும்.

இதன் வழியே, பன்னாட்டு நிறுவனங்களை வளர்த்து – ஊக்குவித்து, நாட்டில் பெரும்பான்மையாக உள்ள சிறுதொழில்களையும் சிறுவணிகத்தையும்

முற்றிலுமாக அழித்து, அவர்களை பெருநிறுவனங்களை - வங்கிகளை அண்டிப் பிழைப் போராக மாற்றும் நாசகரத் திட்டத்தையே மோடி அரசு முன்னெடுத் துள்ளது.

இன்னொரு புறத்தில், சிறு வணிகர்களையும் சிறு தொழில்களையும் மின்னணுப் பணப் பரிமாற்றத்தில் ஈடுபடக்கூறும் இந்திய அரசு, அவர்களின் நிதி ஆதாரங்களையும் விற்பனைத் தொகையையும் கணக் கில் கொண்டு, அவர்களிடம் மறை முகவரி வசூலிப்பை அதிகப் படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

நாட்டிலேயே அதிகளவில் சிறுதொழில் முனைவோரையும், சிறு வணிகர்களையும் கொண்டுள்ள மாநில மாகத் தமிழ்நாடு திகழ்வதால், மற்ற மாநிலங்களை விட இத்திட்டத்தின் வழியே தமிழ்நாடு மிகக் கடுமையாக பாதிக்கப் பட்டுவிடும்.

கடந்த இரண்டு மாதங்களாக நாள்தோறும் அலைக் கழிக்கப்பட்ட மக்கள், மோடியின் உண்மை நோக்கம் கருப்புப் பண ஒழிப்பல்ல என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கினர். அங்கங்கே தகராறுகள், வங்கி வாசல்களில் அதிகரிக்கத் தொடங்கினர்.



**இந்தியத்தேசியத்தின் பெயரால் மோடி முன்வைக்கும் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை, தமிழ்நாட்டுத் தமிழர்கள் தமிழ்த்தேசியத்தை முன் வைத்து எதிர்ப்பதே சரியானதாகும். தமிழ்நாட்டின் சிறுதொழிலையும் வணிகத்தையும் அழித்து, பன்னாட்டு - வடநாட்டுப் பெரு முதலாளிகளை தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்யும் இந்திய அரசின் நடவடிக்கை இது என நாம் மக்களிடம் விரிந்த அளவில் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும்.**

மக்களின் இந்த மனநிலையைப் புரிந்து கொண்ட பிறகு, மோடியின் திட்டத்தை முதலில் ஆதரித்த பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் தங்கள் நிலைபாட்டி லிருந்து பின்வாங்கத் தொடங்கிவிட்டனர்.

இந்த நிலையில், கருத்துக் கணிப்பு என்ற பெயராலும், பல்வேறு பா.ச.க. பிரமுகர்களை முன்னிறுத்தி நடத்தும் பரப்புரைகளாலும் பணமில்லாப் பரிமாற்றத் திற்கு மக்கள் ஆதரவு கொடுத்திருப்பதைப் போல ஒரு கருத்துத் திணிப்பு நடத்தப்படுகிறது. தந்தித் தொலைக் காட்சியின் கருத்துக் கணிப்பும், புதிய தலைமுறைத் தொலைக்காட்சியின் பரப்புரையும் இந்த வகையைச் சார்ந்தவை ஆகும்.

மோடி அரசின் மக்கள் பகை நடவடிக்கையை புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ள மக்கள் மீது இவ்வழிகளில் சாணக்கியத்தனமான கருத்துப்போர் மேலும் கட்டவிழ்த்து விடப் படுகிறது. பணமில்லாப் பரிமாற்றத் திட்டத்திற்கு மக்களின் ஏற்பு திட்டமிட்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

“தூய இந்தியா“வைப் படைப்பதற்கான “தேசபக்த” நடவடிக்கை இது என்றும், இதை எதிர்ப்பவர்கள் “தேச விரோதிகள்” என்றும் அரசு விளம் பரங்களின் வழியாக வும் மோடி சார்பு ஊடகங்கள் வழியாகவும் கருத்துத் திணிப்பு நடந்து வருகிறது.

மோடி அரசின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை எதிர்க்கும் காங்கிரசு, சி.பி.எம்., சி.பி.ஐ. போன்ற இந்தியத் தேசியக் கட்சிகள், இத்திட்டத் தினால் பொது மக்கள் பாதிக்கப்படுவதையும் மக்கள் வங்கி வாசல்களில் மணிக் கணக்கில் நிற்பதையும் ஆங் காங்கு மக்கள் இறப்பதையும் முன்னிறுத்தியே இத்திட்டத்தை எதிர்க்கின்றன. ஏனெனில், மோடி இத்திட்டத்தை வெறும் பொருளியல் நடவடிக்கையாக முன்னெடுக்கவில்லை. இந்தியத் தேசியத்தின் வழியாகவே “பணமதிப்பு நீக்க நட வடிக்கை“யை மோடியும், ஆர்.எஸ். எஸ்.சும் முன் மொழி வது குறிப்பிடத் தக்கது.

பணமதிப்பு நீக்க அறிவிப்பை கறுப்புப் பணத்திற்கு எதிராகவும், பயங்கரவாதிகளின் கள்ளப் பணத் திற்கு எதிராகவும் செய்யப்படும் “தேசபக்த” நடவடிக் கையாக மோடி சித்தரித்தார். ஏ.டி.எம். முன்னால் நீண்ட நேரம் மக்கள் நிற்கின்றார்களே என்றால், எல்லையைக் காக்க படை வீரர்கள் பனிச் சிகரத்தில் நிற்பதைக் கணக்கில் கொண்டால் மக்கள் இவ்வாறு நிற்பது சிறிய “தேசபக்த“ நடவடிக்கையே என்றார்.

அப்பட்டமான இந்த மக்கள் பகை நடவடிக்கை தீவிர இந்தியத்தேசியத்தின் பெயராலேயே நியாயப் படுத்தப்படுகிறது. “தூய்மை இந்தியா“ திட்டம் போல், “பணமற்றப் பரிமாற்றம்“ தூய இந்தியா படைக்கும் தேசபக்த செயல் என மோடி பரப்புரை செய்து வருவதைக் கவனித்தால் இது தெளிவாகும்.

அதனால்தான், இத்திட்டத்தை எதிர்க்கும் காங் கிரசும் இடதுசாரிகளும் “எங்களுக்கு தேசப்பற்று உள்ளது. இத்திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. அதைச் செயல்படுத்தும் முறையைத்தான் எதிர்க்கி றோம்“ என்று மோடியிடம் பம்மி வருகின்றன.

கையில் பணமாக வைத்திருப்பவர்கள் அனைவரும் “இந்தியத் தேசத்திற்கு“ எதிரானவர்களோ என்று ஐயப் பட்டியலில் நிறுத்தப்படு கிறார்கள். பணத்தாளில் புழங்குவோர் இந்தியாவை பலவீனப்படுத்துபவர்கள், மின்னணு பரிமாற்றத்தில் ஈடுபடுவோரே “பரிசுத்தமான இந்தியர்கள்“ என்ற பிம்பத்தை மோடி கட்டமைக்க முயல் கிறார்.

மனையாக, பங்கு மூல தனமாக, தங்கமாக பதுக்கி வைப்பவர்கள் “தேசபக்தர்கள்“! பணத்தாள் வைத் திருக்கும் எளியோர் “தேசத்திற்கு“ இடை யூறு செய்பவர்கள்! இதைத் தான் மோடி கட்டமைக் கிறார்.

இந்த வங்கிப் பரிமாற்றங் களிலும் அட்டைப் பரி மாற்றத்திலும் ஆங்கிலமும் இந்தியும் திணிக்கப் படு கின்றன. ஏற்கெனவே, வங்கி, காப்பீட்டு நிறுவனம், இந்திய அரசுத்துறைகள் ஆகியவை வழியாக அன் றாடம் இந்தித் திணிப்பையும் ஆங்கில ஆதிக் கத்தையும் சந்தித்து வரும் எளிய தமிழர்கள், இன்னும் பெரும் எண்ணிக்கையில் இந்த மொழி ஆதிக்கத்திற்கு ஆட் படுத்தப்படுவார்கள்.

எனவே, இந்தியத்தேசியத்தின் பெயரால் மோடி முன்வைக்கும் பணமதிப்பு நீக்க நடவடிக்கையை, தமிழ்நாட்டுத் தமிழர்கள் தமிழ்த்தேசியத்தை முன் வைத்து எதிர்ப்பதே சரியானதாகும். தமிழ்நாட்டின் சிறுதொழிலையும் வணிகத்தையும் அழித்து, பன்னாட்டு - வடநாட்டுப் பெரு முதலாளிகளை தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்யும் இந்திய அரசின் நடவடிக்கை இது என நாம் மக்களிடம் விரிந்த அளவில் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே காலத்தின் தேவை யாகும்!

தமிழ்நாட்டுச் சூழலைக் கவனத்தில் கொண்டால் இது இன்னும் தெளிவாகும்!

அ.தி.மு.க. தலைவி செயலலிதா மறைவாலும், தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் உடல் நலக்குறை வாலும் தமிழ்நாட்டு அரசியல் அரங்கில், மக்கள் செல்வாக்குமிக்கத் தலைவர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வருகின்ற நிலையில், அந்த வெற்றிடத்தை பா.ச.க. - காங்கிரசு போன்ற இந்தியத்தேசியக் கட்சிகள் சூதான திட்டங்கள் வழியே இங்கு காலூன்றி நிரப்ப முயல்கின்றன.

வரலாற்று உணர்வும், இனமரபுப் பெருமிதமும் இல்லாத தேசிய இனம் ஒரு மக்களாக திரண்டு வல் லாதிக்கத்தை எதிர்க்க முடியாத கையறு நிலையிலேயே நிற்கும்.

இங்கு இந்தியத்தேசியமும், திராவிடத்தேசியமும் தமிழ்த்தேசிய இனத்தின் வரலாற்றுப் பெருமிதங்களை, மரபு அறிவை, அற மரபை துண்டித்து வரலாறற்ற உதிரிகளாக மாற்றிட கருத்துக் களத்தில் செயல்பட்டு வருகின்றன.

இப்பின்னணியில் தி.மு.க. - அ.தி.மு.க. ஆட்சிகள் மக்களை வெறும் பயனாளிக் கூட்டமாக, வாக்கு மந்தையாக மாற்றுவதில் கணிசமாக வெற்றி பெற்றுள்ளன.

அண்டிப் பிழைப்பதையே அரசியல் களத்திலும், பொதுத் தளத்திலும் முன்னேற்றத்திற்கான வழி என இக்கட்சிகள் மக்கள் பண்பாட்டை சீரழித்து வரு கின்றன. உலகமயப் பன்னாட்டு வேட்டையும், அதன் நுகர்வுப் பண்பாடும் மக்களை உதிரிகளாக்குவதில் தீவிரப் பங்காற்றுகின்றன.

நிலவும் கல்வி முறையும், பண்பாட்டு நிலையும், தான் உண்டு - தனது பணப்பெருக்கம் உண்டு என்ற நிலைக்கு மக்களைத் தள்ளுகின்றன. சமூகத்தைப் பற்றி மட்டுமல்ல வயது முதிர்ந்த பெற்றோரைப் பற்றிக்கூட அக்கறை கொள்ளாத தலைமுறையை உருவாக்கி வருகின்றன.

இந்தச் சூழ்நிலைகள்தாம் இன்றுள்ள சமூக மந்த நிலைக்குக் காரணமாகும். கண்ணுக்கு முன்னே காவிரிப் பாசன உழவர்கள் 35 பேர்க்கு மேல் கருகிய பயிரைக் கண்டு மாய்ந்த பின்னும், பெரிய எழுச்சி வராததன் பண் பாட்டுப் பின்னணியும் இதுதான்!

இந்த சமூக மந்தநிலை தீவிர இந்தியத்தேசியமான இந்துத்துவமும், அதன் பரிவாரங்களும் தமிழ்நாட்டில் காலூன்ற வழி ஏற்படுத்தும். அபாயகரமான இந்த அமைதியை உலுக்க வேண்டும்; உடைக்க வேண்டும்.

இதற்கான மாற்றுக் கருத்தியல் தமிழ்த்தேசியமே ஆகும். அதற்குரிய அமைப்பு வடிவம் தமிழ்த்தேசியப் பேரியக்கமே ஆகும்! இந்த உண்மையை ஆணித்தரமாக நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

மாற்றுக் கருத்துகள் இருப்பினும், அண்ணா - எம்.ஜி.ஆர். - கருணாநிதி - செயலலிதா போன்று, பெருமளவிலான மக்கள் திரளின் செல்வாக்கு இல்லாத பலவீனமானத் தலைமையே, தி.மு.க.வின் ஸ்டாலினும், அ.தி.மு.க.வின் சசிகலாவும் ஆகும். இந்த வகையில் அரசியல் வெற்றிடம் கணிசமான அளவில் உருவாகி வருகிறது.

எனவே, இந்தச் சூழலில் தமிழ்த்தேசியக் கருத்துகளை முன்னெடுத்து கருத்தாளர்களையும் சிந்தனையாளர் களையும் ஈர்ப்பதன்மூலம், கருத்துப் போராட்டக் களத்திலும் அமைப்பு வழிச் செயல்பாட்டிலும் முன்னெப்போதும் இல்லாத பெரும் பாய்ச்சலுக்குரிய நடவடிக்கையை நாம் மேற்கொள்ள முடியும்! தேர்தல் அரசியலிலோ - அரைகுறை முயற்சிகளிலோ சிதைந்து விடாமல் இந்த அமைப்பு வழிச் செயல்பாட்டை மேற்கொள்வதே இன்றைய தமிழ்த்தேசியர்களின் உடனடிக் கடமையாகும்! ■

**பெ. மணியரசன்**

# காவிரியைக் காவு கேட்கும் மோடி அரசின் ஒற்றைத் தீர்ப்பாயம்!

மாநிலங்களுக்கிடையில் உள்ள தண்ணீர்ச் சிக்கல் களைத் தீர்த்துத் தீர்ப்புரைக்க, இந்தியா முழுமைக்கும் ஒரே ஒரு தீர்ப்பாயம் அமைப்பது என்று இந்திய அரசு முடிவு செய்து அறிவித்திருக்கிறது. நடுவண் அமைச் சரவை அண்மையில் ஒப்புதல் அளித்துள்ள இந்த ஒற்றைத் தீர்ப்பாயத் திட்டம் பின்வருமாறு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது :

இந்த ஒற்றைத் தீர்ப்பாயத் திட்டத்திற்கு அதிகாரம் வழங்கும் வகையில் "மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்ச் சிக்கல் சட்டம் - 1956" திருத்தப்படும்.

ஒற்றைத் தீர்ப்பாயத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி இருப்பார். இந்த ஒற்றைத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டவுடன் இந்தியாவில் இப்போது செயல்பாட்டில் உள்ள காவிரித் தீர்ப்பாயம் உள்ளிட்ட எட்டுத் தீர்ப்பாயங்களும் காலாவதி ஆகிவிடும்.

இந்த ஒற்றைத் தீர்ப்பாயம் நேரடியாக - மாநிலங்களிடமிருந்து தண்ணீர்த் தகராறு வழக்கை எடுத்துக் கொள்ளாது. இந்திய அரசு அமைத்துள்ள பூசல் தீர்வுக் குழுவில் (Disputes Resolution Committee) ஒரு மாநிலம் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அக்குழு தொடர்புடைய மாநிலங் களை அழைத்து சமரசப் பேச்சு நடத்தும். அப்பேச்சில் உடன்பாடு ஏற்பட வில்லையெனில், அதன்பிறகு தொடர்புடைய மாநிலம் இந்திய அரசுக்கு மனுச் செய்ய வேண்டும். இந்த மனுவை



இந்திய அரசு ஏற்றுக் கொண்டு, அந்தக் குறிப் பிட்ட தண்ணீர்த் தகராறுகளை - ஒற்றைத் தீர்ப் பாயத்தின் விசாரணைக்கு அனுப்பும்.

ஒற்றைத் தீர்ப்பாயம் அங்கங்கே அவ்வப்போது தேவைக்கேற்ப தீர்ப்பாய அமர்வுகளை (Benches) உருவாக்கிக் கொள்ளும். அவ்வாறான ஓர் அமர்வுக்கு - அந்தக் குறிப்பிட்ட தண்ணீர்த் தகராறுகளை விசாரித்து முடிவு செய்ய தீர்ப்பாயம் அனுப்பி வைக்கும். இந்த அமர்வு மூன்றாண்டுகளுக்குள் வழக்கை விசாரித்து இறுதி முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்ப்பாய முடிவுகள் வெளியானவுடன் அது உடனடியாகத் தானாகவே இந்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டு அதிகாரம் வழங்கப்படும்.

தீர்ப்பாய அமர்வு விசாரித்து இறுதி முடிவுகள் வழங்கியவுடன் அந்த அமர்வு கலைக்கப்பட்டுவிடும்.

இவைதாம் இந்திய அரசு இப்போது வெளி யிட்டுள்ள ஒற்றைத் தீர்ப்பாயம் குறித்த விவரங்கள்!

இந்த ஒற்றைத் தீர்ப்பாயத்தை அமைத்திட அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் 1956ஆம் ஆண்டுச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

இந்த ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப்படும்போது, இப்போதுள்ள காவிரித் தீர்ப்பாயம் உள்ளிட்ட எட்டு தீர்ப்பாயங்கள் கலைக்கப்படும். ஆக முதல் பலிகடா தமிழ்நாடுதான்!

காவிரித் தீர்ப்பாயத்தைக் கலைத்துவிட்டு, அதன் இறுதித் தீர்ப்பைக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு, புதிய சமரசப் பேச்சைக் கர்நாடகத்துடன் தமிழ்நாடு தொடங்கக் கட்டளையிட வேண்டும் என்ற சூழ்ச்சித் திட்டத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான், உச்ச நீதிமன்றம் கட்டளையிட்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மறுத்திருக்கிறது இந்திய அரசு என்ற உண்மை இப்போது அம்பலமாகியுள்ளது.

இந்திய அரசே இந்த சூழ்ச்சித் திட்டத்தை முன்வந்து தொடங்க வேண்டும் என்பதில்லை. புதிய ஒற்றைத் தீர்ப்பாயத்தில் கர்நாடக அரசு ஒரு மனுப் போட்டால், அது சமரசத் தீர்வுக் குழுவிற்கு அதை அனுப்பி வைக்கும். சமரத் தீர்வுக் குழு இரு மாநிலங்களையும் அழைத்துப் பேசும் பேசும் பேசிக் கொண்டே இருக் கும். அந்தப் பேச்சுக்கு இப்போது காலவரம்பு விதிக்கவில்லை!

பேச்சு தோல்வி என்று சமரசத் தீர்வுக் குழு அறிக்கை கொடுத்தால்தான் ஒற்றைத் தீர்ப்பாயம் அந்த வழக்கைத் தனது அமர்வுக்கு அனுப்பி விசாரிக்க அறிவுறுத்தும். (அந்த அமர்வு மூன்றாண்டுக்குள் முடிவுகள் வழங்க வேண்டும்).

தமிழ்நாட்டின் காவிரி உரிமைச் சிக்கல் எப்போது முடிவுக்கு வரும்? அது முடிவுக்கு வரக்கூடாது என்பதுதான் இந்திய அரசின் விருப்பம்!

ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கும் திட்டத்தைத் தமிழ்நாட்டு அரசும் தமிழ்நாட்டு மக்களும் ஒட்டு மொத்தமாக எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

## காவிரிக்குப் பொருந்தாது

ஒருவேளை ஒற்றைத் தீர்ப்பாயம் சட்டமாகி விட்டால், இந்தியாவில் அரங்கேறிவிட்டால், காவிரிச் சிக்கலை அந்த ஒற்றைத் தீர்ப்பாய சுழலுக்குள் திணித்துவிடக் கூடாது. ஏன்?

காவிரித் தீர்ப்பாயம் 2007 பிப்ரவரி 5இல் இறுதித் தீர்ப்பு வழங்கி, 19.02.2013இல் அது இந்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டது. 1956ஆம் ஆண்டின் மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்ப் பூசல் சட்டம் பிரிவு 6 ( 2 )இன்படி, ஒரு தீர்ப்பாயத்தின் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டால் அதன் பிறகு, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு அது இணையான தாகும்.

எனவே, முடிந்து போன தீர்வை - ஓர் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை - புதிதாக சமரசப் பேச்சுக்கும் - தீர்ப்பாயத்திற்கும் விடுவது சட்டவிரோதச் செயலாகும்.

மாநிலங்களுக்கிடையிலான ஆற்று நீர்ச் சிக்கல் களைத் தீர்ப்பாயங்களுக்கு விட்டால் அது முடிவுக்கு வராமல் பல ஆண்டுகள் இழுக்கப்படுகின்றன என்றும் அதனால் விரைந்து முடிவு காண ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப் போவதாகவும் இந்திய அரசு கூறுகிறது. இதைவிட மோசடிச் பேச்சு வேறென்ன இருக்க முடியும்?

காவிரித் தீர்ப்பாயம் தனது இறுதித் தீர்ப்பை 2007 பிப்ரவரி 5இல் வெளியிட்டது. அதை அரசிதழில் வெளியிடாமல், வேண்டுமென்றே காலம் கடத்தியது இந்திய அரசு. உச்ச நீதிமன்றம் ஒரு மாதக் காலக்கெடு வைத்து ஆணையிட்ட பின்னர், 2013 பிப்ரவரி 19இல் இறுதித் தீர்ப்பை வேறு வழியின்றி அரசிதழில் வெளியிட்டது. இதனால் அத்தீர்ப்பு உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குரிய அதிகாரம் பெறுகிறது.

ஆனால் காவிரி மேலாண்மை வாரியம் அமைக் காமல் அத்தீர்ப்பை முடமாக்கிப் போட்டது இந்திய அரசுதான். கடந்த செப்டம்பர் மாதம் (2016), ஒரு மாதத்திற்குள் காவிரி மேலாண்மை வாரியம் அமைத் திடவும், பின்னர் அக்டோபர் 4க்குள் அமைத்திடவும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பையே தாக்கி அதனைக் காலொடித்து போட்டது இந்திய அரசு!

நீதிமான்கள் போலவும் நேர்மைச் செம்மல்கள் போலவும் பா.ச.க. ஆட்சியாளர்கள் பாசாங்கு செய்து கொண்டு இப்பொழுது நிலவும் நீண்ட, காலதாம தத்தைத் தவிர்க்கவே இந்தியா முழுமைக்கும் ஒற்றைத் தீர்ப்பாயம் அமைக்கப் போகிறோம் என்று கூறுவது வெறும் பொய் மட்டுமா? வஞ்சகம்! தமிழர்களுக் கெதிரான பகையுணர்ச்சி, அனைத்தையும் உள்ளடக்கிய பொய்!

இந்தியத் துணைக் கண்டத்தை வேட்டையாடும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரவேற்பு வளைவுகள் போடுவதையும், நடை பாவாடை விரிப்பதையும் தனது அரசதருமம் என்று ஆக்கிக் கொண்டுவிட்ட நரேந்திர மோடி அரசு இந்தியாவின் ஆறுகளைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் விற்கப் போகிறது. முதலில் தமிழர்களின் காவிரி நீரை விற்கப் போகிறது.

அதற்கான சட்ட வரைவு (மசோதா) ஒன்றை மோடி அரசு தயாரித்துள்ளது. அதன் பெயர், "தேசியத் தண்ணீர்ச் சட்டக வரைவு 2016" (Draft National Water Framework Bill - 2016 - Draft of 16 May 2016) என்பதாகும்.

இந்த வரைவுச் சட்டம், சட்டம் ஆவதற்கு முன் பலியானது தமிழ்நாட்டுக் காவிரி நீர்தான்!

இந்த வரைவுச் சட்டகம், தண்ணீரை - "விற்பனைக் குரிய சரக்கு" என்று வரையறுக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்காக இதரத் துறைகளில் என்னென்ன செய்யப்படுகின்றனவோ அத்தனையும் ஆறுகளில் செய்யலாம் என்று கூறுகிறது இச்சட்டகம்.

இதன் பொருள், பெப்சி - கோகோகோலா மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பயன்பாடு களுக்காக உள்நாட்டு மக்களிடம் விற்பனை செய்வதற் காகவும் தனியாரிடம் - பன்னாட்டு முதலாளிகளிடம் நமது ஆறுகளை இந்திய அரசு ஒப்படைப்பதை நீதித்துறை தடுக்க அதிகாரம் இல்லாமல் தடை செய்கிறது இச்சட்டம்!

மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, தில்லியின் ஒற்றை அதிகார மையத்தை உருவாக்கி வரும் நரேந்திர மோடியின் சர்வாதிகார நடவடிக்கைகளில், ஒற்றைத் தீர்ப்பாயமும் ஒன்று!

இச்சட்டகத்தின் பிரிவு 23இல் உட்பிரிவு 2 பின்வருமாறு கூறுகிறது: "நகர நீர் வழங்கலில் மீட்டர் அளவுப்படி தண்ணீரின் விலை முடிவு செய்யப்படும்".

இச்சட்டகப்பிரிவு 29இல் உட்பிரிவு 2 சொல்கிறது: "ஒரு தடவை தீர்ப்பு வந்துவிட்டால் - அந்த ஆற்றுச் சிக்கல் அத்துடன் முடிந்துவிட்டதாகக் கருதக்கூடாது. தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் எழுப்பலாம்".

இதன் 30ஆவது பிரிவு ஒரு மாநிலத்திற்குள் பல்வேறு பகுதி அல்லது குழுக்களிடையே எழும் நீர்ச் சிக்கலையும் தீர்க்கும் வகையில் பொறியமைவு வேண்டும் என்கிறது.

இந்தப் பிரிவு 30இன் உட்பிரிவு ( 4 ) கூறுகிறது : இப்பொழுது நிலுவையில் உள்ள தண்ணீர்ச் சிக்கல்கள் அனைத்தையும் இந்தத் "தேசியத் தண்ணீர்ச் சட்டக்" வரைவுக்குள் கொண்டுவர வேண்டும்.

இதன்படி காவிரி உரிமைச் சிக்கலும் கொண்டு செல்லப்படலாம்.

ஏற்கெனவே 2016 மே மாதம் இந்திய அரசு தயாரித்த தேசிய தண்ணீர்ச் சட்டக வரைவு - 2016க்கு ஏற்பத்தான் இப்பொழுது நடுவண் நீர்வளத்துறை "ஒற்றைத் தீர்ப்பாயச் சட்டம்" கொண்டுவர உள்ளது. இவ் விரண்டிற்கும் ஏற்றபடிதான் முன்கூட்டியே காவிரி மேலாண்மை வாரியம் அமையாமல் தடுத்து விட்டது இந்திய அரசு!

காவிரியைக் காவு கேட்கிறது நரேந்திரமோடி அரசின் ஒற்றைத் தீர்ப்பாயத் திட்டம்! இதுவரை நாம் அவ்வப்போது நடத்தி வந்த அடையாளப் போராட் டங்கள் போல், இனியும் தொடர்ந்தால் காவிரி உரிமையை மீட்க முடியாது.

ஒற்றைத் தீர்ப்பாயத் திட்டத்தை முறியடிக்க ஒட்டு மொத்தத் தமிழ்நாடும் இந்திய அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் நடத்த வேண்டும்; தொடர் போராட்டங்கள் நடத்த வேண்டும். இவற்றில் உறுதியாக உண்மையாக தமிழ்த் தேசியப் பேரியக்கம், தனது பங்களிப்பைச் செலுத்தும்! ■

## தோழர் செ. இளங்கோவனின் "ஆறெழுத்து மந்திரம்" கவிதை நூல் வெளியீட்டு விழா!




வழக்கறிஞர் செ. இளங்கோவன் எழுதிய, "ஆறெழுத்து மந்திரம்" கவிதை நூல் வெளியீட்டு விழா சென்னையில், 24.12.2016 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

சென்னை எழும்பூர் இக்சா அரங்கில், பொதுமை பதிப்பகம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் பங்கேற்று நூலை வெளியிட்டுப் பேசினார்.

சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் மு. இராதாகிருட்டிணன், தமிழ்த்தேச மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் தமிழ்நேயன், இயக்குநர் வ. கீரா, கவிஞர் மனுசி பாரதி, தமிழ்த்தேச மக்கள் கட்சி தலைமை நிலையச் செயலாளர் தோழர் தமிழ்மகன் உள்ளிட்டோர் வாழ்த்துரை யாற்றினர்.

நிறைவில், நூலாசிரியர் - வழக்கறிஞர் செ. இளங் கோவன் ஏற்புரையாற்றினார். தோழர் தமிழ்பாலன் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில், தமிழின உணர்வாளர்கள் திரளாகப் பங்கேற்றனர்.




தொண்டு, தியாகம்,
தன்னலமற்ற உழைப்பு
ஆகியவற்றின் உருவமாக
குமரியில் காலூன்றி இமயம் வரை
உயர்ந்து நின்ற ஒரே தமிழ்த் தலைவரான

**காமராசரின் நிழலில்
வளர்ந்தவர் மட்டுமல்ல...
நிழலாய்த் தொடர்ந்தவர்
பழ. நெடுமாறன்**

காமராசரின் உள்ளும் புறமுமாய்
நிறைந்திருந்த அரசியல் சூழலை
அனுபவப் பிழிவாக...
சமகால வரலாற்றின்
அரசியல் ஆவணமாக

**இதுவரை
வெளிவராத
புதிய செய்திகளுடன்
ஏராளமான
அரிய புகைப்படங்களுடன்
வடித்துத் தந்திருக்கிறார்**

# பெருந்தலைவரின் நிழலில்

நூலாசிரியர் **பழ. நெடுமாறன்**

**ரூ. 600/- விலையுள்ள இந்நூலின் முன் வெளியீட்டு விலை ரூ. 400/- மட்டுமே.**

வங்கி வரைவோலை / வங்கிக் கணக்கில் செலுத்தியதற்கான சான்று
கீழ்க்கண்ட முகவரிக்கு 10-01-2017 தேதிக்குள் அனுப்பப்படவேண்டும்.

பணவிடை மூலமும் அனுப்பலாம்

வங்கிக் கணக்கு எண் : 801920100001538
IFSC CODE BKID0008019
பாங்க் ஆப் இந்தியா, தி.நகர், உசுமான் சாலை, சென்னை – 600 017.

அனுப்ப வேண்டிய முகவரி :

**தமிழ்க்குலம் பதிப்பாலயம்**

119/ஏ, டிப்போ லைன், சி. பல்லவபுரம், சென்னை – 600 043.
தொலைப்பேசி : 044-2264 0451

முன்பதிவு செய்பவர்களுக்கு எமது செலவில் அஞ்சல்மூலம் நூல் அனுப்பப்படும்

# "காவிரி உரிமை மீட்க இனி என்ன செய்ய வேண்டும்?"

## தஞ்சை காவிரி உரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் உரை!

காவிரிப் பாசன உழவர் அமைப்புகளின் ஆதரவோடு, தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்த பொறியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மின்துறைப் பொறியாளர்கள் அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து, "**காவிரி உரிமைப் பாதுகாப்புக் கருத்தரங்கம்**" தஞ்சையில் 17.12.2016 அன்று எழுச்சியோடு நடத்தின.

தஞ்சை - நாஞ்சிக்கோட்டை சாலையிலுள்ள காவிரி திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு, தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு தொடங்கியது. த.நா.பொ.ப.து. மூத்த பொறியாளர் சங்க திருச்சி மாவட்டத் தலைவர் பொறிஞர். எம்.பி. துரைராஜ் வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு பொதுப்பணித்துறை முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. கி. மனுராஜ் அறிமுகவுரையாற்றினார்.

த.நா.பொ.ப.து. மூத்தப் பொறியாளர் சங்க மாநிலச் செயலாளர் பொறிஞர் அ. வீரப்பன் கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கிப் பேசினார். அதன்பின், மீத்தேன் திட்டத்தை எதிர்த்துப் போராடிய மே பதினேழு இயக்கத் தலைவர் தோழர் திருமுருகன் காந்தி அவர்களுக்கும், மீத்தேன் திட்ட எதிர்ப்புப் போராளி பொறிஞர் கோ. திருநாவுக்கரசு, மருத்துவர் இலரா. பாரதிச்செல்வன் ஆகியோர்க்கும் பாராட்டு தெரிவித்து, சிறப்புச் செய்தனர். தோழர் திருமுருகன் காந்தி வராததால் அவருக்காக மே 17 இயக்கத்தை சேர்ந்த தோழர் அருண் தங்கராசு பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.



இதனையடுத்து நடைபெற்ற கருத்தரங்கில், மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்டமைப்புத் தலைமை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த. செயராமன், தமிழர் தேசிய முன்னணிப் பொறுப்பாளர் மருத்துவர் இலரா. பாரதிச்செல்வன், தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. த. மணிமொழியன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் திரு. மாசிலாமணி, காவிரிப் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. காவிரி வெ. தனபாலன், காவிரி டெல்டா விவசாயிகள் பாதுகாப்பு சங்கத் தலைவர் திரு. சுவாமிமலை சுந்தர விமலநாதன், தென்னக நதிநீர் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் வழக்கறிஞர் அய்யாக்கண்ணு, தமிழ்நாடு மின்துறைப் பொறியாளர் சங்கத் தலைவர் பொறிஞர் சா. காந்தி, த.நா.பொ.ப.து. மூத்தப் பொறியாளர் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் பொறிஞர் இரா. பரந்தாமன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். முன்னதாக, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை நடுவண் குழு உறுப்பினர் பாவலர் நா. இராசாரகுநாதன், காவிரி உரிமை குறித்து பாவீச்சு வழங்கினார்.

நிறைவில், தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவரும் காவிரி உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாளருமான தோழர் பெ. மணியரசன், "இனி நாம் என்ன

செய்யப் போகிறோம்?" என்ற தலைப்பில் பேசினார். அவர் பேச்சின் சுருக்கமான எழுத்து வடிவம் :

"காவிரி உரிமைப் பாதுகாப்புக் கருத்தரங்கம் என்ற தலைப்பில் நடைபெறும் இக்கருத்தரங்கை, ஒரு மாநாடு போல் நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு பொதுப் பணித்துறை மூத்த பொறியாளர் சங்கத்தின் பொறுப் பாளர்களே, குழுமியுள்ள நண்பர்களே, தோழர்களே, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

எனக்குக் கொடுத்துள்ள "காவிரிச் சிக்கலில் இனி நாம் என்ன செய்யப் போகிறோம்?" என்ற தலைப்பில் உள்ள "நாம்" என்பது யாரைக் குறிக்கிறது?

காவிரிச் சிக்கல் மூன்று தரப்பை உள்ளடக்கியது. முதலில், தமிழ்நாடு. அடுத்து, கர்நாடகம். மூன்றாவதாக இந்திய அரசு.

"தமிழ்நாடு" என்பதில், தமிழ்நாடு அரசும் தமிழ் நாட்டு மக்களும் உள்ளனர். காவிரி உரிமையை மீட்பதில் தமிழ்நாடு அரசுக்குக் கூடுதல் பங்கிருக்கிறது. எனவே, இங்கு நம்முடைய எதிர்காலக் கடமை மட்டுமின்றி, தமிழ்நாடு அரசின் எதிர்காலக் கடமையும் சேர்த்தே பேச வேண்டும்.

காவிரி வழக்கில், தமிழ்நாடு அரசு உரிய சட்டச் சான்றுகளுடன் சரியான வாதங்களை முன்வைத்து வாதாடவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 262 மற்றும் "மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறுச் சட்டம் - 1956" ஆகியவற்றிலுள்ள சட்ட விதிகளின் கூறுகளை தந்திரமாக அரைகுறை யாகப் பேசி, இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர் முகுல் ரோத்தகியும், கர்நாடக அரசின் வழக்கறிஞர் பாலி நாரிமனும் திட்டமிட்டு உண்மைக்கு மாறாக திசைதிருப்பி வாதாடியபோது, சட்ட உண்மைகளை வைத்து அவற்றை அம்பலப்படுத்தவும் முறியடிக்கவும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்கள் வாதப்போர் நடத்தவில்லை.

இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடு மாறு உச்ச நீதிமன்றம் இந்திய அரசுக்குக் கட்டளையிட முடியாது என்றும், இந்திய நாடாளுமன்றத்தில்தான் அது குறித்து முடிவெடுக்க முடியும் என்றும் கூறினார். 1956 - மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறுச் சட்டத்தின் பிரிவு 6 (A) உட்பிரிவு 7, அப்படி கூற வில்லை. தீர்ப்பாயத் தீர்ப்பின்படி அமைக்கப்படும் காவிரி மேலாண்மை வாரியம் போன்ற ஒரு பொறியமைவில், தேவைப்பட்டால் சில திருத்தங்களை (Modification) செய்யலாம் என்றுதான் அது கூறுகிறது.

இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட 2013 பிப்ரவரி 19க்குப் பிறகாவது, காவிரி மேலாண்மை வாரிய அட்டவணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து திருத்தங்கள் கோரியிருக்கலாமே? ஏன் இந்திய அரசு அவ்வாறு செய்யவில்லை?

காவிரி மேலாண்மை வாரியம் என்பது காவிரித் தீர்ப்பாயம் முன்வைக்கும் பரிந்துரை தான் என்கிறது இந்திய அரசு! இது எவ்வளவு மோசடியானது?

பக்ராபியாஸ் மேலாண்மை வாரியம் போல, காவிரிச் சிக்கலுக்கு "காவிரி மேலாண்மை வாரியம்" அமைக்க வேண்டும் என்பதுதான் காவிரித் தீர்ப்பாயம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் (Scheme). இந்திய அரசு, இதற்கு மாற்றாக அதிகாரமுள்ள வேறொரு பொறியமைவை முன்வைக்கலாம். ஆனால், அதிகார முள்ள ஏதாவதொரு செயல்படுத்தும் பொறியமைவு அமைப்பதை தீர்ப்பாயம் கட்டாயமாக்கியுள்ளது. பொறியமைவுத் தேவை என்பது பரிந்துரை அன்று, கட்டாயம்!

2007 பிப்ரவரி 5இல் காவிரித் தீர்ப்பாயம் இறுதித் தீர்ப்பு வழங்கிய பிறகு, 10 ஆண்டுகளாகப் போகும் நிலையில்கூட, காவிரி மேலாண்மை வாரியத்திற்கு மாற்றாக வேறொரு பொறியமைவை நடுவண் அரசு வகுக்கவில்லை. மேலாண்மை வாரியம் அல்லது அதைப் போல் வேறொரு செயலதிகாரமுள்ள கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாதிரி கட்டமைப்பு என்பதுதான் தேர்வுக்குரியது (Choice).

அந்த வகையில்தான், காவிரி மேலாண்மை வாரியம் என்ற வடிவத்தை பரிந்துரையாகத் தீர்ப்பாயம் கூறுகிறது. ஆனால், இறுதித் தீர்ப்பின்படி கர்நாடகம் - தமிழ்நாட்டிற்கிடையே தண்ணீரை பகிர்ந்து திறந்து விடுவதற்கான அதிகாரமுள்ள பொறியமைவு உரு வாக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்ப்பாயம் கட்டாயமாக்கியுள்ளது. அது பரிந்துரையன்று! ஒருபடி மேலே போய், அவ்வாறான செயல்படுத்தும் பொறிய மைவு அமைக்கப்படவில்லையெனில், காவிரித் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வெறும் துண்டுத் தாளாகத்தான் (Piece of Paper) இருக்கும் என்பதைத் தீர்ப்பாயமே கூறியுள்ளது.

காவிரித் தீர்ப்பாயம் முன்வைக்கும் தீர்வையும் செயல்படுத்த மாட்டேன், நானும் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க மாட்டேன் என இந்திய அரசு அடாவடித் தனம் செய்வது, தமிழினத்தைத் திட்டமிட்டு வஞ்சிக்கும் செயல் இல்லையா?

கர்நாடகாவில் காங்கிரசு அரசு நடக்கிறது. இந்தியாவை பா.ச.க. ஆள்கிறது. காவிரிச் சிக்கலில் உச்ச நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை செயல்படுத்தமாட் டேன் என திரும்பத் திரும்ப கர்நாடக காங்கிரசு அரசு கூறுவது எதனால்? இந்தியாவை ஆளும் பா.ச.க. அளிக்கும் துணிச்சலில்தான் அவ்வாறு கூறுகிறது.

"கன்னடர்களும் இந்திய மக்கள்தான் - தமிழர்களும் இந்திய மக்கள்தான்" என்று இந்திய அரசு சமமாகக் கருதவில்லை. இரு இனத்தாருக்குமிடையில் நடுநிலை யாக காவிரித் தீர்ப்பைச் செயல்படுத்தவில்லை. திட்டமிட்டு தமிழ்நாட்டை இந்திய அரசு இனப்பாகு

பாட்டுடன் நடத்துகிறது என நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம்! காங்கிரசு - பா.ச.க. என இதில் கட்சி வேறுபாடு இல்லை.

உச்ச நீதிமன்றத்தில் பேசுவதற்குரிய இந்த வாதங் களையெல்லாம் தமிழ்நாடு அரசு ஏன் தயாரிக்க வில்லை? கர்நாடக அரசின் வழக்கறிஞர் பாலி நாரிமன் வீட்டிற்கு, அம்மாநில முதல்வர் சித்தராமையா நேரில் சென்று பேசுகிறார். அம்மாநிலத்தின் முன்னாள் நீதிபதிகளிடம், வழக்கறிஞர்களிடம் கலந்தாய்வு செய்து அவர்களுக்கான வாதங்களைத் தயார் செய்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாடு அரசு என்ன செய்கிறது? தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் என்ன செய்கிறார்? காவிரி உரிமையைக் காக்கும் பொறுப்பும் மக்கள் பாதிக்கப்படுவார்களே என்ற அச்சமும் தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறதா? ஏன் இவ்வளவு அலட்சியமாக இருக்கிறீர்கள்? தமிழ்நாடு அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசின் காவிரி சிறப்புத் தொழில்நுட்பப் பிரிவின் தலைவராக, முன்னாள் தலைமைப் பொறி யாளர் சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிறார்கள். அவர் செயல்படுகிறாரா? வழக்கறிஞர்களுக்கு சான்றுகளை - தருக்கங்களை வழங்குகிறாரா? அவருடன் தமிழ்நாடு அரசு பேசுகிறதா? அவர் பேச்சை தமிழ்நாடு அரசு கேட்கவில்லையா? எல்லாம் மர்மமாக இருக்கிறது! பிறகு எதற்கு அந்த “செல்“ ?

இனிமேலாவது, அந்தக் காவிரித் தொழில்நுட்பப் பிரிவை உரியவாறு தமிழ்நாடு அரசு பயன்படுத்த வேண்டும். அதுமட்டுமில்லை, பணி ஓய்வு பெற்ற பாசனப் பொறியியல்துறை வல்லுநர்கள், தகுதிமிக்க வழக்கறிஞர்கள் ஆகிய அரசுக்கு வெளியே உள்ள வல்லுநர்களை தமிழ்நாடு அரசு பயன்படுத்த வேண்டும்.

இப்போது, இந்திய அரசு புதிதாக ஒரு சட்டத்தை இயற்றவுள்ளது. அனைத்துத் தண்ணீர்த் தகராறு களையும் விசாரிக்க ஒற்றைத் தீர்ப்பாயம் ஒன்றை அமைக்கப் போகிறார்களாம். அப்படியென்றால், காவிரித் தீர்ப்பாயத்தின் இறுதித்தீர்ப்பு என்னாவது? செயல்படுத்த வேண்டிய நிலையிலுள்ள தீர்ப்பைக் கைவிட்டு, திரும்பவும் முதலிலிருந்து காவிரிச் சிக்கல் புதிய ஒற்றைத் தீர்ப்பாயத்தில் தொடங்கப்படுமா? என்ன அநீதி இது?

தமிழ்நாட்டு மக்களும் திருந்த வேண்டும். மீண்டும் மீண்டும் 1,000 ரூபாய்க்கும் 2,000 ரூபாய்க்கும் வாக்குகளை விற்றுவிட்டு, உரிமைகளை இழந்து நிற்கதியாக நிற்கக்கூடாது. நம் உரிமைப் பறிப்பிற்கு எதிராக - நமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆவேசம் பெற வேண்டும். போராட வேண்டும். பறிக்கப்படும் நம்முடைய உரிமையை மீட்கும் போராட்டத்தில் பின்தங்கியிருக்கும் தமிழ்நாடு அரசு செயல்படும் வகையில் தமிழ்நாட்டு அரசை நோக்கியும் நாம் போராட வேண்டும்.

கடந்த மூன்று மாதங்களில் இதுவரை, 26 உழவர்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில், நீரின்றி பயிர்கள் கருகிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியில் மாரடைப்பிலும், தற்கொலை செய்து கொண்டும் இறந்துள்ளனர்.

தமிழ்நாட்டின் வேளாண் துறை அமைச்சர் இதே தஞ்சை மாவட்டத்தில்தான், பாபநாசத்தில் இருக் கிறார். உணவுத்துறை அமைச்சர் மன்னார்குடியில்தான் இருக்கிறார். அதேபோல், வேதாரணியம் - தலை ஞாயிறில் தமிழ்நாடு கைத்தறித்துறை அமைச்சர் இருக்கிறார். ஏன் இவர்கள், இறந்த உழவர்களின் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் கூறக்கூடாது? ஏன் அவர்களது காய்ந்த வயல் களைப்பார்வையிடக் கூடாது? எது உங்களைத் தடுக்கிறது?



நாங்கள் சென்று நேரில் பார்த்தோம். காவிரி உரிமை மீட்புக் குழு சார்பில் ஒரு குழுவாகச் சென்று தஞ்சை மாவட்டத்தில் கருகிக் கிடந்த வயல் வெளிகளைப் பார்த்தோம். இங்கே, கல்வி ராயன் பேட்டையி லிருந்து உழவர் அறிவழகன் வந்தி ருக்கிறார். அவரை நாங்கள் பார்க்கச் சென்ற போது, “அய்யா எங்களையா பார்க்க வந்தீங்க.. நாங்கதான் நாதியற் றவர்கள் ஆச்சே!“ என்று குமுறினார்.

ஆறுதல் சொல்லக்கூட ஆளில்லாதவர்களாக தமிழ்நாட்டு உழவர்கள் அநாதைகளாக நிற்கி றார்கள். தமிழ்நாடு அரசு ஏன் இவர்களுக்கு இழப்பீடு அளிக்க மறுக்கிறது? வயலில் வேளாண் பணியில் ஈடுபட்டிருக்கும்போது உழவர் இறந்தால், அவருக்கு 1 இலட்ச ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று அரசாணை உள்ளது. இறந்து போன உழவர் குடும்பங்களுக்கு அதைக்கூட வழங்கவில்லை. இது எவ்வளவு பெரிய அநீதி!



தனது வயலில் நீரின்றி காய்ந்து சருகாகிக் கிடந்தப் பயிர்களைக் கண்டு, வயலிலேயே அதிர்ச்சியில் விழுந்து இறந்தார் ஆதிச்சபுரம் உழவர் அழகேசன். அவர் மனைவி இதைத் தெளிவாக காவல்துறை புகாரில் எழுதிக் கொடுத்துள்ளார். அழகேசன் சாவுக்கான முதல் தகவல் அறிக்கையிலும் (FIR), அவர் மனைவி கூறிய காரணம் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், இவற்றையெல்லாம் தமிழ்நாடு அரசு சாகுபடி பாதிக்கப் பட்டதால் நடந்த சாவுகளாக அல்லது தற்கொலை களாகப் பதிவு செய்வதில்லை.

நமது காவிரி நீரைத் தடுக்கும் கர்நாடகத்திலோ, வேளாண்மை பொய்த்து உழவர்கள் தற்கொலை செய்து கொண்டாக பதிவு செய்கிறார்கள். அண்மையில் கள ஆய்வு செய்ய வந்த, நடுவண் நீர்வளத்துறை அதிகாரிகளிடம் அந்தப் பட்டியலை கர்நாடக அரசு கொடுத்தது. தமிழ்நாடு அரசிடம் அப்படியொரு பட்டியலே இல்லை! காவிரி நீர் போதாமையால் கர்நாடகத்தில் விவசாயிகள் அதிகம்பேர் இறந்துள் ளார்கள் என்று அந்த நடுவண் குழு உச்ச நீதி மன்றத்திற்கு அறிக்கை தந்தது. உண்மையிலேயே காவிரி நீர் தடுக்கப்பட்டதால் இறந்து போன தமிழ்நாட்டு விவசாயிகளின் பட்டியலை உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு கொடுக்கவில்லை.

தண்ணீரின்றி சாகுபடி பொய்த்ததால் உயிர் நீத்த உழவர்கள் குடும்பத்திற்கு தலா 15 இலட்ச ரூபாய், தமிழ்நாடு அரசு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும். தண்ணீரின்றி நெற்பயிர் கருகிப்போன நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். தண்ணீரின்றி சாகுபடி செய்ய முடியாமல் இவ்வாண்டு தரிசாகப் போடப்பட்ட நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகளில் உற்பத்தி நிறுத்தம் செய்தால், தொழிலாளர்களுக்கு வேலையில்லாக் கால ஊதியம் (Layoff Compensation) வழங்குவதைப் போல், விவசாயத் தொழிலாளிகளின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000 வாழ்வூதியத் தொகை வழங்க வேண்டும்.

இந்த இழப்பீடுகளை வழங்க இந்திய அரசிடம் தமிழ்நாடு அரசு சிறப்பு நிதி பெற வேண்டும். இந்திய அரசின் ஒப்புதலுக்குக் காத்திராமல், உடனடியாக இந்த இழப்பீட்டுத் தொகைகளை வழங்க வேண்டும்.

இந்திய அரசு தமிழ்நாட்டுக்கெதிரான இனப்பகை அரசியல் நடத்துகிறது. மேலாண்மை வாரியம் அமைக்கவிருந்த நிலையில், கடைசி நொடியில் அதைத் தட்டிப் பறித்தது இந்திய அரசு! எனவே, காவிரி உரிமையை மீட்க இந்திய அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் நடத்த வேண்டும்.

நடுவண் அரசு அமைச்சர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தால் கருப்புக் கொடி காட்ட வேண்டும். அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் தமிழ் மக்கள் கலந்து கொள்ளக் கூடாது. நடுவண் அமைச்சரவையிலுள்ள தமிழ்நாட்டு அமைச்சர் பதவி விலக வேண்டும். இந்திய அரசு கொடுக்கும் விருதுகளைத் தமிழர்கள் யாரும் வாங்கக்கூடாது! இந்திய அரசின் வங்கிகளில் உழவர்கள் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தக்கூடாது. காவிரிப்படுகையில் இந்திய அரசு பெட்ரோலியம், எரிவளி, மீத்தேன் உள்ளிட்ட எதையும் எடுக்க அனுமதிக்கக் கூடாது.

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து காந்தியடிகள் 1920இல் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கும்போது, பேயாட்சி நடத்துவோருடன் ஒத்துழைப்பது ஒரு பாவம் (It would be a Sin to co-operate with the Satanic Government) என்றார். வெள்ளை அரசுக்கு எதிராகக் காந்தியடிகள் காட்டிய ஒத்துழையாமைப் போராட் டத்தை இப்பொழுது, இந்திய அரசுக்கு எதிராக தமிழர்கள் நடத்த வேண்டிய தேவையுள்ளது.

தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீரைத் திருடிக் கொண்டிருக்கும் கர்நாடகாவுக்கு எதிராக, தமிழ்நாடு அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

கர்நாடகத்தில் உற்பத்தியாகும் மஞ்சள், புகையிலை போன்றவற்றை ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டுச் சந்தையில் விற்க அனுமதிக்கக்கூடாது. கர்நாடகப் பொன்னி அரிசி உள்ளிட்ட கர்நாடக அரிசி எதுவும் தமிழ்நாட்டில் நுழைய அனுமதிக்கக் கூடாது. மக்கள் அதை வாங்கக்கூடாது. நெய்வேலியிலிருந்து கர்நாடகம் செல்லும் மின்சாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டுத் திரைப்படத்துறையினர், கர்நாடகத் திரைப்படத்துறையினருடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது!

இவையெல்லாம்தான் தமிழர் ஒத்துழையாமை இயக்கத்தின் அடிப்படைக் கூறுகள்! இவ்வாறான அறவழிப் போராட்டங்களை நடத்தி, இந்திய அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் அழுத்தம் கொடுத்து, நெருக்கடி கொடுத்து, காவிரியில் நமக்கான நீதியைப் பெறுவோம்! தனித்தனி உழவர்கள் மனம்நொந்து உயிரை மாய்த்துக் கொள்ளாதீர்கள்! நம்பிக்கை பெறுங்கள்! நம்மால் வாழ முடியும்! நீங்கள் உயிர் நீத்த பின், உங்கள் குடும்பம் என்னாவது என்று எண்ணிப் பாருங்கள்! நமது அறவழிப் போராட்டங்களுக்குப் பலனில்லையென்றால், தமிழர்கள் அனைவரும் வீதிக்கு வந்து, கூட்டாகப் போராடி கூட்டாகச் சாவோம்! தனி மனிதர்கள் யாவரும் விரக்தியடைந்து உயிரைப் போக்கிக் கொள்ளக் கூடாது! நம்மால் நீதியைப் பெற முடியும்! நம்பிக்கையோடு செயல்படுங்கள்! போராடுங்கள்!“

இவ்வாறு தோழர் பெ. மணியரசன் பேசினார்.

தநா.பொ.ப.து. மூத்தப் பொறியாளர் சங்க மாநிலச் செயலாளர் பொறிஞர் அ. வீரப்பன், கருத்தரங்கின் தீர்மானங்களை முன்மொழிந்து, அவை பலத்த கையொலிகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், ஏழுநூற்றுக்கும் மேற்பட்ட உழவர்களும் தமிழ் மக்களும் திரளாகப் பங்கேற்றனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில், பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், பொருளாளர் தோழர் அ. ஆனந்தன், தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு, தலைமைச் செயற்குழு தோழர்கள் பழ. இராசேந்திரன், நா. வைகறை, குடந்தை க. விடுதலைச்சுடர், பெண்ணாடம் க. முருகன், சென்னை க. அருணபாரதி, திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன், தஞ்சை மாநகரச் செயலாளர் தோழர் இலெ. இராமசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் தோழர் ரெ. கருணாநிதி, தோழர் காமாட்சிபுரம் காமராசு, புளியங்குடி க. பாண்டியன், தீந்தமிழன், திருத்துறைப்பூண்டி ப. சிவவடிவேலு, பா. பார்த்தசாரதி உள்ளிட்ட பேரியக்கத் தோழர்களும், மகளிர் ஆயம் நடுவண் குழு உறுப்பினர் தோழர் ம. இலட்சுமி தலைமையில் திரளான மகளிர் ஆயம் தோழர்களும், தமிழக உழவர் முன்னணி கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் சி. ஆறுமுகம் தலைமையில் அம்மாவட்ட உழவர்களும், செயற்குழு உறுப்பினர் தோழர் கோட்டூர் தனபாலன் உள்ளிட்ட உழவர் முன்னணிப் பொறுப்பாளர்களும் பங்கேற்றனர். ■

## திருச்சியில் மக்கள் பாவலர் இன்குலாப் நினைவேந்தல்!




மக்கள் பாவலர் இன்குலாப் நினைவேந்தல் கூட்டம், திருச்சியில் 16.12.2016 மாலை, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை சார்பில் சிறப்புற நடைபெற்றது.

திருச்சி – தொடர்வண்டி சந்திப்பு நிலையம் அருகிலுள்ள இராசா உணவகத்தில் (ஹோட்டல் ராஜா) நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை நடுவண் குழு உறுப்பினர் பாவலர் நா. இராசரகுநாதன் தலைமையேற்றார். முன்னதாக, மாணவர் கருத்த ரங்கம் நடைபெற்றது. “மாற்றத்தை விரும்பிய மக்கள் பாவலன்” என்ற தலைப்பில் மாணவர் கி.மா. நிலவனும், “பாட்டைக் கருவியாக்கிய படைப்பாளன்” என்ற தலைப்பில் மாணவி மெய் கீர்த்தியும், “ஒடுக்குமுறை களை எதிர்த்தப் போராளி” என்ற தலைப்பில் மாணவி மு. செந்தமிழ்ச்செல்வியும் கருத்துரை வழங்கினர். பேராசிரியர் மகிழெந்தி பாவீச்சு நிகழ்த்தினார்.

இலக்கியத் திறனாய்வாளர் தோழர் வீ.ந. சோ, தமிழர் தேசிய முன்னணி துணைத் தலைவர் வழக்கறிஞர் த. பானுமதி, தமிழ்க் கலை இலக்கியப் பேரவை பொதுச் செயலாளர் தோழர் நா. வைகறை, திரு. தமிழாதன் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), தமிழ்நாடு தமிழ்வழிப் பள்ளி நிர்வாகிகள் சங்கத் தலைவர் திரு. அ.மு. முஸ்தபா கமால், பாவாணர் தமிழியக்க அமைப்பாளர் முனைவர் பி. தமிழகன், ஜமால் முகமது கல்லூரி தமிழியல் துறை பேராசிரியர் மு. சாதிக் பாட்சா, சமூகச் சிந்தனை உயிர்ப்பியக்கம் அமைப்பாளர் திரு. எம். செல்வராஜ், தமிழ்த்தேசியப் பேரியக்கத் திருச்சி மாநகரச் செயலாளர் தோழர் மூ.த. கவித்துவன் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

நிறைவில், தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ.மணியரசன் அவர்கள் நினைவேந்தல் உரை நிகழ்த்தினார். நிகழ்வில், திரளான தமிழின உணர்வா ளர்களும், இலக்கிய ஆர்வலர்களும் பங்கேற்றனர்.


Owned and Published by P.Maniarasan from 21, 1st Street, 1st Sector, Kalaignar Karunanidhi Nagar, Chennai- 600 078 and printed by T.Muthukumar at Print Faast, 53/1,Orandiamman Koil Street,Velachery, Chennai-600042, Editor: P. Maniarasan

## 2ஆம் பக்கத் தொடர்ச்சி....

தமிழ்நாட்டு மக்கள் தங்கள் முன்னோர் வழக்கப்படி "காளைத் திருவிழா"வை சிறப்பாக நடத்தும்படி, த.தே.பே. தலைமைச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, சேலம், தருமபுரி, கிருட்டிணகிரி ஆகிய மாவட்டங் களில் தமிழர் மரபுப்படி அனைவருக்குமான "காளைத் திருவிழா"வை சிறப்புற நடத்த தமிழ்த்தேசியப் பேரியக்கம் தமிழ் மக்களோடு இணைந்து பணியாற்றுவ தென்று பேரியக்கத் தலைமைச் செயற்குழு முடிவு செய்கிறது.

**2. இந்திய அரசு நிறுவனங்களில் மண்ணின் மக்களைப் புறக்கணித்து, வெளி மாநிலத்தவர் களுக்கு வேலை தந்தால் அவர்களை வெளியேற்றுவோம்!**

தமிழ்நாட்டிலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (SBI) வங்கிக் கிளைகளில், பணியில் சேர நடந்தத் தேர்வில் 1,420 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளது. இதில் 90 விழுக்காட்டினர் கேரள மற்றும் இந்தி மாநில மாணவர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

மொழிவழித் தாயகமாக தமிழ்நாடு அமைக்கப்பட்ட நோக்கத்தையே முறியடிக்கும் வகையில், தமிழ்நாட்டி லுள்ள இந்திய அரசு நிறுவனங்களிலும் தொழிற் சாலைகளிலும் அண்மைக் காலமாக 80 விழுக்காட் டிற்கு மேல் அயல் மாநிலங்களைச் சேர்ந்தவர்களையே வேலைக்குச் சேர்க் கிறார்கள்.

இதற்காக நடத்தப்படும் அனைத்திந்தயத் தேர்வுகள் சூதாகவும் சூழ்ச்சியாகவும் நடத்தப்பட்டு, மண்ணின் மக்களா கிய தமிழ்நாட்டு மாணவர்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் படுகின்றனர்.

இப்பணிகளில் சேர்வதற்குரியத் தகுதியுள்ள கல்வி கற்று, வேலை கிடைக்காமல் இலட்சக்கணக்கானத் தமிழ்நாட்டு இளைஞர்கள் வறுமை மட்டுமின்றி அவமானத்தையும் சுமந்து வாடிக் கொண்டிருக் கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை கோரி பதிவு செய்துள் ளோர் எண்ணிக்கை 90 இலட்சம்!

அனைத்திந்தியத் தேர்வு முறையை நீக்கிவிட்டு, தமிழ்நாட்டிலுள்ள இந்திய அரசு நிறுவனங்களில் தமிழ்நாட்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாகவே வேலைக்கு ஆள் சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள இந்நிறுவனங் களில் 90 விழுக் காட்டு வேலை தமிழர்களுக்கே வழங்க வேண்டும். இது போல், மண்ணின் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன் னுரிமை தரும் அரசாணை சரோஜினி மகிசி அறிக்கையின் கீழ் கர்நாடகத்தில் செயல்படுகிறது என்பதை இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.



இப்பொழுது தமிழ்நாட்டிலுள்ள எஸ்.பி.ஐ. கிளை களில் உள்ள காலி இடங்களில், கேரளத்தவரையும் வடநாட்டின ரையும் 90 விழுக்காட்டு அளவிற்கு வேலையில் சேர்க்கும் திட்டத்தைக் கைவிட்டு, அந்தத் தேர்வு முடிவுகளை இரத்து செய்ய வேண்டும்.

அவ்வாறில்லாமல் தேர்வில் வென்றவர்கள் என்ற சாக்கில், வெளி மாநிலங்களைச் சேர்ந்த 1,420 பேரை தமிழ்நாடு எஸ்.பி.ஐ. கிளைகளில் பணியமர்த்தினால், அந்தந்த வங்கி அலுவலகத்திற்குள் சென்று, புதிதாக வேலைக்குச் சேர்ந்த அயல் மாநிலத்தவரை வெளியேற்றுவோம் என்று இத் தலைமைச் செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

மண்ணின் மக்களுக்கான இந்தத் தற்காப்பு அற வழிப் போராட்டத்தில் தமிழ் மக்கள் அங்கங்கே கலந்து கொள்ள வேண்டுமென்று தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைமைச் செயற்குழு உரிமையோடு கேட்டுக் கொள்கிறது.

**3. தமிழ்நாட்டை முழு வறட்சி மாநிலமாக அறிவித்து, துயர் நீக்கப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண் டும்!**

இந்திய அரசின் துணையுடன் கர்நாடக அரசு தமிழ் நாட்டுக்குரிய காவிரி நீரை திறந்துவிடாமல், தானே எடுத்துக் கொண்டதால் காவிரிப் பாசன மாவட்டங்கள் சாகுபடி இழந்து, செய்த சாகுபடிப் பயிரும் கருகி, முற்றிலுமாக இவ்வாண்டு வேளாண்மை பாழ்பட்டுவிட்டது.

இவ்வாண்டு, தமிழ்நாடு முழுவதிலும் பத்து விழுக்காட்டு அளவிற்கே மழைப் பெய்து, 90 விழுக்காடு பருவமழைப் பொய்த்துப் போனதால், முழு வறட்சி நிலவுகிறது. எனவே, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் வறட்சி பாதித்த மாநிலமாக தமிழ்நாடு அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்புடன் சேர்த்து, வறட்சித் துயர் நீக்கத் திட்டங்களை அறிவிக்க வேண்டும்.

பயிர் செய்து தண்ணீரின்றி காய்ந்து போன நிலங் களுக்கு – நெல்லுக்கு ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய், கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு 50,000 ரூபாய், மற்றும் பிற பயிர்களுக்கு முழு இழப்பீடு வழங்க வேண்டும். சாகுபடி செய்ய முடியாமல் தரிசாகக் கிடக்கும் வேளாண் நிலங்களுக்கு ஏக்கருக்கு 15,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகளில் உற்பத்தி நிறுத்தம் (Layoff) ஏற்பட்டால், தொழிலாளர்களுக்கு இழப்பீட்டு ஊதியம் வழங்கு வதுபோல், உழவுத் தொழிலாளர் களுக்கு ஒரு குடும்பத்திற்கு 25,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.

காவிரி நீர் கர்நாடக அரசால் தடுக்கப்பட்டதால், தான் செய்த பயிர் கருகுவதைக் கண்டும் வாங்கியக் கடனை எப்படி அடைப்பது என்று துன்புற்றும், மாரடைப்பு ஏற்பட்டும், தற் கொலை செய்து கொண்டும் உயிர் நீத்த குடும்பம் ஒவ்வொன் றுக்கும் 15 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் மக்களுக்கும் கால்நடை களுக்கும் வன விலங்குகளுக்கும் உரிய குடிநீர் கிடைக்க தமிழ்நாடு அரசு போர்க்கால வேகத்தில் செயல்பட வேண்டும்.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு இந்திய அரசிடம் "சிறப்பு நிதி" பெற உடனடியாக அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைமைச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.


செயின் ஜார்ஸ் மேல்நிலைப்பள்ளி (பச்சையப்பன் கல்லூரி எதிரில்) சென்னை.
06 .01.2017 முதல் 19.01.2017 வரை
2017 சென்னை புத்தகக் காட்சியில்
தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்
கடை எண் 118
பெ.மணியரசன் – கி. வெங்கட்ராமன் எழுதிய
புதிய நூல்கள் வெளிவருகின்றன!
மறுபதிப்பு நூல்கள் விற்பனைக்கு!
திராவிடம் தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா வழிமாற்றியதா?
பசுமை மார்க்சியமும் தமிழ்த் தேசியமும்
தமிழ்த் தேசக் குடியரசு
திருவள்ளுவர் நாட்குறிப்பேடு
மொழிப்போர் முன்னெடுப்போம்
தமிழர் தாயகமா வெளியாரின் வேட்டைக் காடா?
தமிழ்த்தேசியம்
தமிழ்த்தேசியத்தின் பன்மை
உலகமயம் இந்தியம் தமிழ்த்தேசியம்
விடுதலை இறையியலும் தமிழ்த் தேசியமும்
தொழிலாளர் பகைச் சட்டங்களைத் தகர்த்தெறிவோம்
2017 திருவள்ளுவர் நாட்குறிப்பேடு
அனைத்து நூல்களுக்கும் சிறப்புக் கழிவு உண்டு!
பன்மை வெளி
21, முதல் தெரு, முதல் பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை – 600 078
044 24742911 / 98408 48594 / 94439 18095